# எனது ஊர் காரை நகர்

www.karaiNEWS.com

இதழ் 27

கனடாவில் இருந்து வெளியாகும் காரைநகர் செய்தி சஞ்சிகை. இலவசம். தொலைபேசி : 1 416 821 8390









## உள்ளே...


☆ உடையார் இராமலிங்கம் நாகலிங்கம்...

☆ காரைநகர் அபிவிருத்தி சபை நிர்வாக கட்டமைப்பு...

☆ இன்றைய காரைநகரும் கல்வியும்...

☆ பிரதேச வைத்தியசாலை காரைநகர்...

☆ கனடா காரை கலாசார மன்றம் புதிய நிர்வாகசபை...

☆ கனடா காரை இந்து பழைய மாணவர் சங்கம்...

☆ மேலும் இவற்றுடன் 'எனது ஊர் காரைநகர்' தம்பட்டம்...




















'எனது ஊர் காரைநகர்'
வெளியீடு பிரதான அனுசரணை:

**Dr.V.Vijayaratnam M.D Canada**


Sell your home for top dollars
Buy Your Home For Less $$$
•FREE home market evaluation
•Free home staging
•Professional photo & virtual tour
•Just listed & sold flyer distribution
•Social media marketing
•Install sale & directions sings
•Email / e-flyers & weekly advertising
•Weekly open house
RE/MAX
OUTSTANDING AGENT FOR OUTSTANDING RESULTS
RE/MAX
Excel Realty Ltd., Brokerage
independently owned and operated
Bus: 905-475-4750
Fax: 905-475-4770
50 Acadia Ave #120, Markham, ON L3R 0B3
Honest, Knowledgeable & Professional Service
in Your Neighborhoods Full Time Realtor
Raj Nadarajah
Sales Representative
Dir: 416-333-6115
nanohomes@gmail.com

## ஆக்கியோன் மனதிலிருந்து...

‘எனது ஊர் காரைநகர்’ சஞ்சிகையின் 27வது இந்த இதழ் உங்கள் கைகளிற்கு கிடைக்கப்பெற்றுள்ளது.
காரைநகரின் குரலாக ஊடகத்துறையில் 18 ஆண்டுகளாக வலம் வரும் காரைநியூஸ் இணையத்தளத்தின் வரலாற்று பதிவுகளாக இச்சஞ்சிகை வெளிவந்து கொண்டிருக்கின்றது. கனடாவில் 2006 இல் ஆரம்பித்து இன்று ஆர்வமுள்ள பலராலும் பல நாடுகளில் இருந்தும் கேட்டுப்பெற்றுக்கொள்ளப்பட்டு பெறப்பட்டு வருகின்றது.

காரைநகர் அபிவிருத்தியில், காரைநகர் மக்களின் வளர்ச்சியில் கடந்த 20 ஆண்டுகளாக செயற்பட்டவர்கள், உதவிகள் புரிந்தவர்கள், பதவிகள் வகித்தவர்கள் என எவருமே பதிவு செய்து கொள்ளாத, நினைவில் வைத்துக் கொள்ளாத பணிகளென பலவற்றை இந்த சஞ்சிகை பதியவைத்துள்ளது. கடந்த 26 இதழ்கள் ஊடாக கடந்த 20 வருட காரைநகர் பொதுப் பணிகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

அது மட்டுமன்றி ஒரு சிறிய ஊரிற்குள்ளே ஊடகப்பணி ஆற்றி வரும் இந்த சஞ்சிகை ஊடாக உரியவர்களிற்கு தேவையான தகவல்களை வழங்கி அதனூடாக பல்வேறு தரப்பட்ட பணிகள் கடந்த 20 ஆண்டுகளில் நிறை வேற்றப்பட்டுள்ளன. அதற்காக இந்த சஞ்சிகை எந்த உரிமைகளையும் தனதாக்கிக் கொண்டதில்லை. ‘யார் குத்தினாலும் அரிசியாகட்டும்’ என்கிற கொள்கையோடு காரைநகர் மண்ணிற்கும் மக்களிற்கும் தேவையான பலவித அபிவிருத்தி பணிகளையும் தேவைகளையும் பலரும் கேட்கும் வகையில் உரைத்துக்கொண்டது. அதனை செவிமடுத்து தாமாக முன்வந்து ஆவண செய்தவர்களின் செயற்பாடுகள் ஏராளம் தாராளம்.

காரைநகர் மாணவர்களின் உடனடி தேவைகள் பலவற்றை ‘எனது ஊர் காரைநகர்’ ஊடாக தெரிவிக்கப்பட்டு நேரடி தொடர்புகள் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டு 2021, 2022 ஆகிய வருடங்களில் பலவித உதவிகள் நிறைவேற்றிக்கொடுக்கப்பட்டன. 2021ம் ஆண்டு காரைநகர் அபிவிருத்தி சபை மாணவர் நூலகத்திற்கு வழங்கப்பட்ட ஆறு இலட்சம் ரூபா பெறுமதியான போட்டோ பிரதி இயந்திரத்திற்கு கடந்த இரண்டு ஆண்டுகளில் 4 இலட்சம் ரூபா செலவில் அதற்குரிய பேப்பர் மற்றும் ரோணர் வழங்கப்பட்டது. தற்போது அதன் செலவுகளை கனடா காரை கலாசார மன்றம் ஏற்றுக்கொண்டுள்ளதாக அறியப்படுகின்றது.

இந்த வருடம்(2022) தோப்புக்காடு, பெரியமணல், சடையாளி ஆகிய பகுதிகளில் வீட்டுத் திட்டத்தினால் பயனடைந்தும் முற்றுப்பெறாத வீடுகளை நிறைவுபடுத்தி குடியிருக்கும் வகையில் மூன்று வீடுகளிற்காக உதவிகள் பெறப்பட்டு காரைநகர் அபிவிருத்தி சபையூடாக வழங்கப்பட்டன.

இந்த வருடம்(2022) பல்கலைக்கழகம் செல்லும் மூன்று மாணவர்களிற்கான மாதாந்த உதவியாக 10,000 வீதம் ‘எனது ஊர் காரைநகர்” ஊடாக பெற்று நேரடியாக பயனாளிகளிற்கு வழங்கபடுகின்றது.

பாடசாலைக்கு சென்றாலும் ரியூசன் வகுப்புகளிற்கான நிதி வழங்க முடியாத நிலையில் உள்ள 7 மாணவர்களிற்கு மாதாந்த ரியூசன் தொகையினை வழங்க ‘எனது ஊர் காரைநகர்’ ஊடாக வெளிநாடு வாழ் மக்கள் முன்வந்துள்ளனர். கடந்த ஆகஸ்ட், செப்டெம்பர் மாதங்களில் தொடர்ச்சி யாக இரண்டு மாதங்களிற்கு 25 சிறுவர்கள் உள்ள முன்பள்ளி ஒன்றிற்கு ‘எனது ஊர் காரைநகர்’ ஊடாக சத்துணவு வழங்கப்பட்டது.

காரைநகர் ஊரியை சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையின் வைத்திய சிகிச்சைக்காக அவசரமாக தொடர்பு கொண்ட போது எவ்வித உத்தரவாதமும் இன்றி வைத்திய அவசரத் தேவையை கருத்தில் கொண்டு அன்றைய தினமே கேட்கப்பட்ட 40,000 ரூபா வைத்திய சாலை மருந்தகத்தில் கட்டப்பட்டது. அதன் முக்கியத்துவம் பின்னர் வைத்தியசாலை நிர்வாகத்தின் ஊடாக அறிந்துகொள்ளப்பட்டது.

‘எனது ஊர் காரைநகர்’ செய்திப்பணிகளோடு மட்டும் நின்றுவிடாது மக்கள் அளித்துவரும் பேராதரவோடு எம்மாலான கல்விப்பணி மற்றும் தர்மப்பணிகள் பலவற்றிலும் ஈடுபட்டு வருவதோடு வெளிநாடுகளில் வதியும் காரைநகர் மக்களையும் நேரடியாக அப்பணிக ளில் ஈடுபடுத்தி வருகின்றது.

வெளிநாடுகளில் வாழும் காரை மக்களிடம் காரைநகர் பணிகளிற்காக தனிப்பட்டளவில் எந்தளவிலும் நிதியுதவியும் பெறுவதில்லை என்பதோடு ஊரின் தேவையறிந்து தெரிவிக்கப்படும் போது தொடர்புகொள்கின்ற அன்பர்களின் உதவிகள் நேரடியாக அவர்கள் விரும்பும் பணிகளிற்கு அவர்களே நேரடியாக வழங்கும் வகையில் அனைத்து உதவிகளும் செய்து கொடுப்பதே எனது பணியாகும்.

**இச்சஞ்சிகை வெளியீட்டிற்காகவும் அதனை அஞ்சல் ஊடாக கனடாவில் பல நூற்றுக் கணக்கான கனடா வாழ் காரைநகர் மக்களின் கைகளில் சேர்ப்பிக்கவும் தொடர்ந்து ஆதரவு தரும் Dr.வி.விஜயரத்தினம் மற்றும் தொழிலதிபர் திரு.பாலசுப்பிரமணியம் மகாதேவன் ஆகியோ – ருக்கு இச்சந்தர்ப்பத்தில் நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றேன்.**

www.karainews.com
**‘ எனது ஊர் காரைநகர் ’**
**தொகுப்பாளர்:**
**தீசன் திரவியநாதன்**
**331 Trudelle Stree, Unit 34**
**Toronto, Ont. M1J 3J9 Canada**
**Email: theesan@karainews.com**
**TEL: 416 821 8390**



## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்று காரை இந்துவிற்கு செல்லும் மாணவர்களிற்கு மாதந்தம் ஆயிரம் ரூபாய்கள்





கழக மாணவர்களின் கற்றல் தேவைகளிற்காக தலா 50,000 (ஐம்பதாயிரம்) ரூபாய்கள் ஐந்து மாணவர்களிற்கு வழங்கப்பட்டதுடன், உயர் கல்வி கற்கும் மாணவி ஒருவருக்கு மாதாந்தம் 3,000 ரூபாய்களும் வழங்கப்பட்டது.

காரைநகர் பாடசாலைகளில் கல்வி கற்று 5ம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்கள் பலரும் யாழ் நகரின் மற்றைய பாடசாலைகளிற்கு மாற்றலாகிச் சென்று வருவது கடந்த 10 ஆண்டுகளில் அதிகரித்து வருவது கண்டுகொள்ளப்பட்டது. இவ்வாறு காரைநகர் பாடசாலைகளில் கல்வி கற்று தரம் 6ற்கு வெளிப் பாடசாலைகளிற்கு செல்லாது தொடர்ந்தும் காரைநகர் இந்துக் கல்லூரியில் இணைத்துக்கொண்டு கல்வியை தொடரும் மாணவர்களிற்கு அவர்கள் கல்வி கற்கும் காலமான தரம் 6 முதல் தரம் 12 வரை, ஒவ்வொரு மாணவருக்கும் தலா ஆயிரம் ரூபாய்கள் வீதம் மாதாந்தம் வழங்கி அவர்களது கல்வியினை காரைநகரிலேயே தொடர்வதற்கு ஊக்கப்படுத்தும் வகையில் இத்திட்டம் அமையப்பெற்றுள்ளது.

காரைநகர் இந்துக்கல்லூரியின் பழைய மாணவனும் அமெரிக்காவில் Texas மாநிலத்தில் பொறியியல் துறையில் உயர்பதவி வகித்து வருபவருமான திரு.பாலசுப்பிரமணியம் மகேஸ்வரன் அவர்கள் இத்திட்டத்திற்கான முழுமையான நிதிப்பங்களிப்பை வழங்குவதற்கு முன்வந்துள்ளார். அத்துடன் ஏற்கெனவே இதுவரை காரை இந்துவில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்று தரம் 6 முதல் தரம் 12 வரை கல்வி கற்று வரும் 36 மாணவர்களிற்கு முதல் கட்டமாக தலா ஆயிரம் ரூபாய்கள் 07.10.2022 வழங்கி இத்திட்டத்தினை ஆரம்பித்து வைத்தார்.



அத்துடன் மாப்பாணவூரி பகுதியை சேர்ந்தவர்களும் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்று வருபவர்களும் நடுத்தர வர்க்க தொழிலாளர் குடும்பங்களை சேர்ந்த 5 பல்கலைக்



காரைநகர் மாப்பாணவூரியை சேர்ந்த திரு. திருமதி பாலசுப்பிரமணியம் ஜெயமணி தம்பதிகளின் மகனும் மாப்பாணவூரி நாச்சி அம்மன் கோயிலை புனரமைத்து அதனூடாக இப்பகுதி மக்களினதும் மாணவர்களினதும் ஆன்மீக கல்வி வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்கி வரும் திரு.திருமதி பாலசுப்பிரமணியம் ஜெயமணி தம்பதிகள் மற்றும் அவர்களது பிள்ளைகள் காரை மாணவர்களின் கல்வி வளர்ச்சியிலும் சமூக சமுதாய வளர்ச்சியிலும் அதீத அக்கறையு டன் செயற்பட்டு வருபவர்கள்.

கனடாவில் இருந்து கனடா காரை கலாசார மன்றம், காரை இந்து பழைய மாணவர் சங்கம், 'எனது ஊர் காரைநகர்' இணையத்தளம் ஊடாகவும் மற்றும் நேரடியாகவும் பல்வேறு காரைநகர் மண்ணின் அபிவிருத்திகளிற்கு நிதியுதவி அளித்து வரும் திரு.பாலசுப்பிரமணியம் மகாதேவன் அவர்களும் ஒரே குடும்பத்தை சேர்த்தவர்கள்.



## காரை இந்து மைதானத்தில் நிழல் தரும் மரங்கள் நாட்டப்பட்டன! 04.04.2022

காரைநகர் இந்துக்கல்லூரி மைதானத்தில் நிழல் தரும் மரங்கள் 12 நாட்டப்பட்டன. காரை இந்துவில் கல்விகற்று 1989ம் ஆண்டு க.பொ.த.சாதாரணதர பரீட்சை எழுதிய மாணவர்கள் சார்பாக இந்த நிழல் தரும் மரங்கள் நாட்டப்பட்டன.

நன்கு வளர்ந்த இம்மரங்கள் மைதானத்தின் கிழக்கு மற்றும் தென் கிழக்கு பகுதிகளில் ஆழமான கிடங்குகள் வெட்டப்பட்டு சேதன பசளை, செம்மண் மற்றும் இயற்கை உரங்கள் இடப்பட்டு 04.04.2022 அன்று நாட்டப்பட்டன. கடந்த இரண்டு வருட காலமாக இதற்காக எடுத்துக்கொண்ட முயற்சிகளின் பயனாக இச்செயற்பாடு பயனளித்துள்ளது.

பாடசாலை மைதானத்தை சுற்றிவர உள்ள சுவர்கள் மீளகட்டுப்பட வேண்டிய நிலை உள்ள நிலையில் அதனை காரணமாக கொண்டு இந்த மரநடுகை பின்தள்ளிப்போனது, இருந்த போதிலும் மதில் கட்டும் செயற்திட்டம் இன்னமும் சரிவராத நிலையில், தற்போது உள்ள மதிலானது கிழக்கு பக்கமாக மீளபுனரமைக்கும் போது 8 அடி மைதானத்தின் உள்ளே அமையவுள்ளது என்பதுடன் தற்போது நாட்டப்பட்டுள்ள மரங்கள் தற்போதைய சுவரில் இருந்து 5 அடி உள்ளே மைதானத்தில் நாட்டப்பட்டுள்ளன.

புதிய சுவர் கட்டப்பட்டதும் நாட்டப்பட்ட மரங்கள் மைதானத்திற்கு வெளியே சுவரில் இருந்து மூன்று அடி வெளியே வீதிப்பக்கமாக அமைந்து கொள்ளும். இந்த மரநடுகையின் போது காரைநகர் இந்துக்கல்லூரி அதிபர், உபஅதிபர், ஆசிரியர்கள், மாணவர்களுடன் காரைநகர் பிரதேச செயலர் திரு.ஜெகூ மரியதாசன், J/42 கிராமசேவகர் திரு.இ.இராசதுரை, கலாசார உத்தியோகத்தர், மற்றும் காரைநகர் அபிவிருத்தி சபை தலைவர் திரு.இ.சிவசுப்பிரமணியம், காரைநகர் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்க செயலாளர் திரு.சு.அகிலன், அம்பாள் முன்பள்ளி நிர்வாக தலைவர் திரு.நா.பாலகிருஸ்ணன், சிவகௌரி முன்பள்ளி ஆசிரியை திருமதி.இந்திராணி வடிவழகையன், மற்றும் 1972, 1973, 1974 ஆகிய ஆண்டுகளில் பிறந்த முன்னாள் மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டு இம்மரங்களை நாட்டிவைத்தனர்.
இதற்கான செலவான ரூபா ஒன்றரை இலட்சம் ரூபாய்களை 1973 மாணவர்கள் வழங்கியிருந்தார்கள்.



மேலும் தொடர்ந்து இம்மரங்களை பராமரிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. மேற்படி பழைய மாணவர்கள் சார்பில் பாடசாலையில் சிறு திருத்த வேலைகளிற்காக மேலும் 50,000 ரூபா செலவில் செயற்பாடுகள் நிறைவேற்றப்படவுள்ளன.

“எனது ஊர் காரைநகர்” உடாக கடந்த ஏப்ரல் மாதம் செயற்படுத்தப்பட்ட இம்மரம் நடுகை செயற்பாடுகள் தொடர்ந்தும் பராமரிக்கப்பட்டு தொடர்ச்சியாக கோடை காலங்களில் தண்ணீர் பௌசர்கள் ஊடாக நீர் ஊற்றப்பட்டதுடன் தொடர்ந்தும் பராமரிக்கப்பட்டு வருகின்றது. இதனை ‘எனது ஊர் காரைநகர்” சார்பாக நேரடியாக செயற்படுத்திவரும் திரு.பூவன் கணபதிப்பிள்ளை அவர்களிற்கு இத்தருணத்தில் நன்றியை கூறிக்கொள்கின்றேன்.









# காரைநகரில் வீட்டுத்திட்டம் பெற்றவர்களின் வீடுகள் ‘ எனது ஊர் காரைநகர் ’ ஊடாக நிறைவேற்றிக்கொடுக்கப்பட்டன



காரைநகர் பெரியமணலை சேர்ந்தவரும் காரைநகர் சிவன்கோயில் மற்றும் பல கோயில்களில் அடிப்படை உதவியாளராக பணிபுரியும் அன்பர் ஒருவரிற்கு வீட்டுத்திட்டத்தின் மூலம் அரசினால் வீடு கட்டிக்கொடுக்கப் பட்டது. ஆனாலும் அந்த வீட்டுத்திட்டத்தினை நிறைவு செய்து நிலம் போடவும் கதவு, யன்னல் போடவும் மேற்கொண்டு இரண்டரை இலட்சம் ரூபாய்கள் வரை தேவையெனவும் அந்த வீட்டுத்திட்டத்திற்கு பொறுப்பாக இருந்து பணிபுரியும் உதவியாளர் மூலம் அறிந்து கொண்ட காரைநகர் அபிவிருத்தி சபை தலைவர் திரு.இ.சிவசுப்பிரம ணியம் அவர்கள் அதற்கான உதவியினை பெற்றுத்தரு - மாறு கேட்டுக்கொண்டார்.

அதற்கமைய திரு.தீசன் திரவியநாதன் அவர்களால் ‘எனது ஊர் காரைநகர்’ சார்பாக ரூபா ஒரு இலட்சம் ரூபாவும் தலைலவர் திரு.இ.சிவசுப்பிரமணியம் அவர்களால் ஒன்றரை இலட்சம் ரூபாவும் வழங்கப்பட்டது. மேற்படி உதவியின் மூலம் காரைநகர் அபிவிருத்தி சபை முன்னின்று அந்த அன்பரிற்குரிய வீட்டினை முழுமைபடுத்தி வழங்கினார்கள். மேற்படி குடும்பத்தில் காரைநகர் இந்துக்கல்லூரியில் கல்விபயிலும் இரண்டு மாணவிகள் உள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

காரைநகர் கல்லந்தாழ்வை சேர்ந்த மூன்று பிள்ளைகளை உடைய கூலித்தொழிலை அடிப்படையாக கொண்டியங்கும் குடும்பத்தின் வீட்டு திட்டத்திற்கு கடந்த வருடம் மூன்று தடவைகளாக ரூபா ஒரு இலட்சம் ரூபா வழங்கப்பட்டது.

மேற்கொண்டு அந்த வீட்டு திட்டத்தினை பார்வையிட சென்ற போது மேலும் வீட்டுத்திட்டத்தினை நிறைவு செய்ய மின்சார இணைப்பு பெற்றுக்கொள்ள ரூபா 25,000 வழங்கப்பட்டது. ‘எனது ஊர் காரைநகர்” ஊடாக மேற்கொள் ளப்பட்ட இந்த திட்டத்திற்கு மலேசியாவில் வதியும் காரை உறவான திருமதி சரஸ்வதி அம்மா அவர்கள் ‘எனது ஊர் காரைநகர் ‘ ஊடாக வழங்கிய நிதியினை காரைநகர் வியாவில் ஐயனார் கோயில் தர்மகத்தா அவர்களினால் குடும்பத்தாரிடம் வழங்கி வைக்கப்பட்டது.

காரைநகரை சேர்ந்த மேலும் இரண்டு குடும்பங்களிற்கு பாடசாலைக்கு செல்லும் பிள்ளைகளின் கல்விக்கான உதவியாக 40,000 ரூபா வழங்கப்பட்டது. காரைநகர் கல்லந்தாழ்வை சேர்ந்த குடும்பம் ஒன்றிற்கும் காரைநகரை சேர்ந்த முன்னாள் போராளி குடும்பம் ஒன்றும் கிளிநொச்சியில் புனர்வாழ்வழிக்கப்பட்டு உடல் ஊனத்துடன் வாழ்ந்து வரும் குடும்ப தலைவரைக்கொண்ட குடும்பத்திற்கும் அவர்களின் பிள்ளைகளின் கல்வியினை அடிப்படையாக கொண்டு தலா 20,000 ரூபா வழங்கப்பட்டதுடன் மாதாந்தம் 5,000 ரூபா பெறும் வகையில் ஒரு வருடத்திற்கான நிதி வைப்பில் இடப்பட்டு வழங் கப்பட்டது. கிளிநொச்சியில் வாழும் இக்குடும்பத்தை சேர்ந்த மாணவி 2019ம் ஆண்டு க.பொ.த.சாதாரண தர பரீட்சையில் அதி சிறந்த பெறுபேறுகளைப் பெற்று விஞ்ஞான பீடத்தில் தனது உயர்கல்வியை கற்று வருகின்றார் என்பதும் குறிப்பிடத்த க்கது.



காரைநகர் தோப்புக்காட்டை சேர்ந்த மற்றுமொரு குடும்பத்தின் வீட்டு திட்டத்தை பூர்த்தி செய்து கொடுக்க வேண்டிய கட்டாயத்தை காரைநகர் அபிவிருத்தி சபை செயலாளர் திரு.M.S.செந்துரன் அவர்கள் ‘எனது ஊர் காரைநகர்’ இற்கு தெரியப்படுத்தியிருந்தார். உடனடியாக அதனை பூர்த்தி செய்ய கதவு, ஜன்னல்கள் உட்பட வீடு குடிபுகுதல் வரை நிறைவு செய்து கொடுக்க ஒரு இலட்சத்து முப்பதாயிரம் ரூபாய்கள் வழங்கப்பட்டதுடன் அதனை திரு.செந்தூரன் அவர்களே முன்னின்று அத்தேவையினை பூர்த்தி செய்து வழங்கியிருந்தார். இதற்கான நிதியினை திரு.தீசன் திரவியநாதன் அவர்கள் வழங்கியிருந்தார்.







‘எனது ஊர் காரைநகர்’, www.Karainews.com
காரைநகர் அபிவிருத்தி சபையுடன் இணைந்து வழங்கும்
**“காரைநகர் சேவையாளர்” கௌரவம்**
**01.01.2023**
New Star கல்வி நிலையம்

காரை மண் சுயநலமற்ற பொதுப்பணியாளர்களினால் தான் வளர்ச்சி கண்டு வருகின்றது. காரை மண் போருக்கு பின்னர் மீண்டும் துரிதகதியில் சகஜநிலை பெறவும், முன்னேற்றம் பெறுவதற்கும் கல்வி, சேவை, ஊர் பணி என்பவற்றில் தமது அன்றாட கடமைகளிற்கும் தமது தேவைகளிற்கும் மேலாக ஒருபடி மேலே சென்று மக்களிற்காகவும் சேவை புரிந்த சேவையாளர்களால் மட்டுமே காரை மண் இன்று இவ்வளவு தூரம் துரித வளர்ச்சிபெற்று வந்துள்ளது.

அதனை கருத்தில் கொண்டு முதற்கட்டமாக ‘எனது ஊர் காரைநகர் ’ மற்றும் www.karainews.com இவ்வாறான சேவையாளர்களை இனம் கண்டு கௌரவிக்க திட்டமிட்டது. 2017ம் ஆண்டு முதன் முறையாக 20 சேவையாளர்களை கௌரவித்தது. தொடர்ந்து 2019ம் ஆண்டு மேலும் 10 சேவையாளர்கள் கௌரவிக்கப்பட்டனர். மூன்றாவது தடைவயாக இவ்வாண்டு(2022) மேலும் 7 சேவையாளர்களை கௌரவிப்பதில் பெருமை கொள்கின்றது.

1990ம் ஆண்டுகளில் இருந்து பொதுப்பணியிலும் சிரமதானத்திலும் ஈடுபடும் எண்ணமும் செயலும் மிகமிக குறைவடைந்து வந்துள்ளதுடன், தமது கடமைகளிற்கும் மேலாக பொதுப்பணியில் ஈடுபட்டு வருபவர்கள் மீது மேலும் பல அழுத்தங்களை கொடுத்து அவர்களையும் பொதுப்பணியில் இருந்து வெளியேற்றும் செயற்பாடுகளே அதிகரித்து வருகின்றன. ஆனாலும் தன்னலமற்ற வகையில் ஊர் மக்களின் நலன்களை மட்டும் கருத்தில் கொண்டு சேவையாற்றுபவர்களை கௌரவிப்பதன் மூலமே மேலும் பல சேவையாளர்களை உருவாக்கவும் மீண்டும் ஊர்ப்பணி சிரமதானம் என்பவற்றில் தன்னலமற்ற வகையில் மீண்டும் அடுத்த சந்ததியினரை உருவாக்க முடியும் என்பதனை நோக்காகக் கொண்டு இந்த சேவையாளர்கள் கௌரவிப்பினை ‘எனது ஊர் காரைநகர்’ www.karainews.com திட்டமிட்டு செயற்படுத்துகின்றது.

வருடந்தோறும் மேலும் பல சேவையாளர்களை நாம் இனங்கண்டு கௌரவிப்போம். காரைநகர் மண்ணிற்காக மக்களிற்காக பணியாற்ற அரச மற்றும் தனியார் அமைப்புக்கள் ஊடாக உத்தியோக தேவைகளிற்காக காரைநகரிற்கு வரும் உத்தியோகத்தர்கள் தமது உத்தியோக பணிகளிற்கு அப்பால் காரை மக்களின் மனங்களில் நிலைத்திருக்கும் வகையில் கடந்த பல ஆண்டுகளில் பணி புரிந்தவர்களை அடையாளம் காணுவோம். சம்பளத்திற்காக பணியாற்றுபவர்களை விட சமுதாய முன்னேற்றத்திற்காக பணியாற்றுபவர்களை கௌரவிப்போம்.

இடம் பெயர்ந்த நகரங்களில் இருந்தும் இடம் பெயர்ந்த நாடுகளில் இருந்தும் காரை மண்ணின் வளர்ச்சிக்காக கருசரணையுடன் நிதி உதவி செய்தும் அதற்காக வளங்களை அள்ளி அள்ளி வளங்கி வந்தாலும் அவற்றினை உரிய முறையில் பயனாளிகளை சென்றடைய வைக்கவும் நேரடியாக காரை மண்ணில் இருந்து பாரபட்சம் பாராது சென்றடைய வைக்கின்றவர்களும், காரை மண்ணின் தற்போதைய வளர்சியில் அதற்கான தேவைகளை கண்டறிந்து தன்னலமற்ற வகையில் தெரிவித்து வரும் சேவையாளர்களை கனம் செய்வோம்,

மண்ணிற்காகவும் மக்களிற்காகவும் தன்னலமற்ற வகையில் பணிபுரிபவர்களை வாழும் போதே வாழ்த்துவோம்.

2023.01.01 நடைபெறவுள்ள சேவையாளர் கௌரவத்தின் போது காரைநகர் பாடசாலைகளில் 20 வருடங்களிற்கு மேலாக தொடர்ச்சியாக பணியாற்றி இன்றும் என்றும் அன்றைய மாணவர் மனங்களில் குடிகொண்டிருக்கும் 5 முன்னாள் ஆசிரியர்களும் வைத்தியர் மற்றும் சிரமதான தொண்டர் என 7 சேவையாளர்கள் கௌரவிக்கப்படுகின்றார்கள்.

1. நா.செல்வரத்தினம் (ஆசிரியர்)
2. A.சோமாஸ்கந்தன்(ஆசிரியர்)
3. கா.குமாரவேலு (ஆசிரியர், அதிபர்)
4. அருமைநாயகம் கமலேஸ்வரி(ஆசிரியர்)
5. திருமதி.நாகரத்தினம் தனலட்சுமி (ராசாத்தி ரீச்சர் - ஆசிரியை, அதிபர்)
6. Dr.A.அம்பிகைபாகன்
7. திரு.செல்வராசா வேலாயுதபிள்ளை - (சிரமதான தொண்டன், பொதுப்பணியாளர்)

# சிரமதான தொண்டன், பொதுப்பணியாளன் செல்வராசா வேலாயுதபிள்ளை

'எனது ஊர் காரைநகர்' www.karainews.com வழங்கும் திரு.செல்வராசா வேலாயுதபிள்ளை அவர்களிற்கான கௌரவம் எமக்கு நாமே கௌரவிப்பது போல தோன்றினாலும் திரு.செல்வராசா வேலாயுதபிள்ளை அவர்களிற்கு 'காரைநகர் சேவையாளர்' கௌரவம் வழங்குவதில் விமர்சனங்கள் இருந்தாலும் அதற்கு அப்பாலும் பெருமை கொள்கின்றது.

காரணம் திரு.செல்வராசா வேலாயுதபிள்ளை அவர்களைப் பற்றியும் அவருடைய பணிகள், அவருடைய செயற்பாடுகள், அவருடைய மனிதாபிமான பணிகளை 'எனது ஊர் காரைநகர்' எடுத்துச் சொல்லாவிட்டால் ஊரவர்கள் அறிந்து கொள்ள வாய்ப்புக்கள் இல்லை. காரணம் எவ்வித விளம்பரங்களோ அன்றி பிரதி உபகாரங்களோ எதிர்பாராது காரைநகர் மக்களிற்காக மட்டுமல்லாது இலங்கை நாட்டின் பல பகுதிகளிலும் வாழும் மக்கள் பலரின் தேவையறிந்து தன்னால் முடிந்தளவு அவற்றிற்கான தீர்வுகளை பெற்றுக்கொடுத்துள்ளார்.


திரு.செல்வராசா வேலாயுதபிள்ளை அவர்கள் அனுராதபுரம் நீர்ப்பாசன திணைக்களத்தில் இறுதி நிலை அரச ஊழியராக பணியாற்றி வருபவர். அனுராதபுரத்திற்கும் காரைநகரிற்கும் ஆறு மணி நேர ஒருவழி பயண நேரமாக இருந்தாலும் தேவையேற்படும் பட்சத்தில் தினமும் செல்ல தயங்காதவர்.



திரு.செல்வராசா வேலாயுதபிள்ளை அவர்களும் நானும்(தீசன் திரவிய நாதன்) ஆரம்ப பாடசாலையான சடையாளி பள்ளிக்கூடத்தில் இருந்து ஒருவரை ஒருவர் அறிந்து கொண்டவர்களாயினும் நாற்பது ஆண்டுகளிற்கு மேலாக நாம் எந்த தொடர்புகளும் கொண்டிருக்க வில்லை.
2015ம் ஆண்டளவில் அமரர் கலாநிதி கெனடி விஜயரத்தினம் அவர்கள் மீண்டும் எனக்கு செல்வராசா அவர்களை அறிமுகப்படுத்தினார். அன்றிலிருந்து சிறுக சிறுக தொடர்ந்த தொடர்புகள் ஊடாக திரு.செல்வராசா வேலாயுதபிள்ளை அவர்களின் மனிதாபிமான பணிகள் எங்கள் நட்பு வட்டத்தில் பரவத்தொடங்கின.

ஊரிற்கான பணிகள் எவரும் அறியாத வண்ணம் நிறைவேற்றப்பட்டு வந்தன.'எனது ஊர் காரைநகர்' ஊடாக மட்டுமன்றி உத்தரவாதம், நாணயம், நம்பிக்கைக்கு உட்பட்டளவில் திரு.செல்வராசா வேலாயுதபிள்ளை ஊடாக வெளிநாடுகளில் வதியும் நண்பர்கள், அன்பர்கள் ஊர் மக்களிற்காகவும் மற்றும் போரினால் பாதிப்படைந்த வேறு நகர மக்களிற்கும் அளப்பரிய பணிகள் நிறைவு செய்யப்பட்டன.

கல்விக்காக, ஒரு வேளை உணவிற்காக சிரமப்படும் மக்களை கண்டு கொண்டு தெரிவிப்பதுடன், உண்மை நிலமைகளை அறிந்து கொண்டு அவர்களிற்கு தேவையான உதவிகளை பெற்றுக்கொடுப்பதுடன், காரைநகரில் இருந்து எந்தவிதமான வேண்டுகோள்கள் கிடைக்கப்பெற்றாலும் அவற்றினை உறுதி செய்து கொள்வதற்கும் உரிய நேரத்தில் உரிய தேவைகளை இனம் கண்டு கொள்ளவும் செய்யப்படும் உதவிகள் உரியவர்களை சென்றடையவும் செல்வராசா வேலாயுதபிள்ளை அவர்கள் தனது நேரத்தையும் சிரமத்தையும் பாராது பலருக்காகவும் உதவி செய்து வருபவர்.




வெளிநாடுகளில் வதியும் பலர் செல்வராசா அவர்கள் ஊடாக தமது தர்ம காரியங்கள் பலவற்றை தொடர்ச்சியாக செய்து வருகின்றனர். அவ்வாறு செயற்படுத்தப்படும் தர்ம காரியங்கள் வருடந்தோறும் எண்ணிலடங்காதவை.

வெளிநாடுகளில் வதியும் நண்பர்கள் தமது உறவினர்களின் இழப்புக்கள், உறவினர்களின் ஞாபகர்த்தமாக செய்யப்படும் கைங்கரியங்கள் பலவும் திரு.செல்வராசா வேலாயுதபி - ள்ளை அவர்கள் ஊடாகவே நிறைவேற்றப்படுகின்றன.

கிளிநொச்சி, வவுனியா, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கைதடி, செல்வச்சந்நிதி என எங்கெங்கே உதவிகள் தேவைப்படும் மக்கள் இருந்தாலும் உடனே அந்த இடத்திற்கு சென்று உண்மை நிலையினை கண்டறிந்து உதவி செய்வதில் என்றுமே சலிப்போ அன்றி தயக்கமோ வெளிக்காட்டாதவர். தேவை கருதி ஐந்தாயிரம் ரூபாவாக இருந்தாலும் ஐந்து இலட்சம் ரூபாவாக இருந்தாலும் அதனை உரிய நேரத்தில் உரியவரிடம் கையளிப்பதுடன் அதற்கான உத்தரவாதத்தையும் உடனடி யாகவே வழங்குவதில் தனது நாணயத்தையும் கேள்விகளே இல்லாத வகையில் நிறைவு செய்து வருபவர்.


கோவிட் பேரிடர் காலத்தின் போது காரைநகரிலும் மற்றும் தேவை ஏற்பட்ட பல இடங்களிலும் பலதரப்பட்ட மக்களிற்கும் உடனடியாக உதவிகளை பெற்று வழங்கியதுடன் உதவிகளை வழங்கியவர்களிற்கு நேரடியாக காணொளி ஊடாகவும் சம்பந்தப்பட்டவர்கள் ஊடாகவும் உத்தரவாதத்தை வழங்கி உதவி செய்பவர்களின் மனங்களை நிறைவுடன் மென்மேலும் தர்ம காரியங்களில் ஈடுபட உற்சாகம் வழங்குபவர்.

இவை எல்லாவற்றிற்கும் மகுடம் வைத்தாற்போல் எந்த கோடீஸ்வரர்களிடமும் இல்லாத மனமும் தாராள மனப்பாண்மையும் தர்ம சிந்தனையும் உள்ள திரு.செல்வராசா வேலாயுதபிள்ளை அவர்கள் காரைநகர் பிரதேச செயலகத்திற்கு கிராம சேவகர் அலுவலகம் அமைப்பதற்கு தனது இரண்டு பரப்பு காணியினை அன்பளிப்பாக வழங்கியுள்ளார். இருப்பதில் கொடுத்து இன்புற்று வாழும் மனநிலை கொண்டுள்ள திரு.செல்வராசா வேலாயுதபிள்ளை அவர்களிற்கு 'காரைநகர் சேவையாளர்' கௌரவம் வழங்குவதில் பெருமை கொள்கின்றது 'எனது ஊர் காரைநகர்'



## கனடா காரை கலாசார மன்றம் புதிய நிர்வாக சபையை பெற்றுக்கொண்டது 29.09.2022

கனடா காரை கலாசார மன்றத்தின் பொதுக்கூட்டம் 29.09.2022 அன்று கனடா ஸ்காபுரோ நகர சபை மண்டப அறையில் நடைபெற்றது. 2019ம் ஆண்டு தெரிவு செய்யப்பட்ட திரு.சிவசுப்பிரமணியம் சிவராமலிங்கம் தலை -மையிலான நிர்வாக சபை 2021 ஏப்ரல் மாதம் வரை நிர்வாகத்திற்காக தெரிவு செய்யப்பட்ட போதிலும் கடந்த கோவிட் பேரிடர் காரணமாக தொடர்ந்தும் 2022 செப்ரெம்பர் மாதம் வரை நீடித்திருந்தது. திரு.சிவசுப்பிரமணியம் சிவராமலிங்கம் அவர்களது நிர்வாக சபையில் உபதலைவராக பொறுப்பேற்றிருந்த திரு.சபாரத்தினம் பாலச்சந்திரன் தலைமையில் 29.09.2022 அன்று நடைபெற்ற பொதுக்கூட்டத்தின் போது திரு.சிவசம்பு சிவநாதன் தலைமையில் புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டது. கோவிட் பேரிடர் காரணமாக தடைபெற்றிருந்த கனடா காரை கலாசார மன்றத்தின் வழமையான செயற்பாடுகள் யாவும் மீண்டும் வழமைபோல் செயற்படுத்தவும் கனடா காரை கலாசார மன்றத்திற்கு ஏற்பட்டுள்ள சவால்களை எதிர்கொண்டு கனடாவில் காரைநகர் மக்களிடையே ஒற்றுமையை மேம்படுத்தி நிர்வாகத்தை முன்னெடுத்து செல்வோம் என தலைவராக தெரிவு செய்யப்பட்ட திரு.சிவசம்பு சிவநாதன் அவர்கள் தெரிவித்தார்.



தலைவர்: திரு.சிவசம்பு சிவநாதன்



**நிர்வாக சபை உறுப்பினர்கள் விபரம் வருமாறு:**

தலைவர்: திரு.சிவசம்பு சிவநாதன்
உபதலைவர்: கனக சிவகுமாரன்
செயலாளர்: திருமதி நாகேஸ்வரி சிவகுமார்
உதவிச் செயலாளர்: திரு.தம்பிராசா ெ ஜயச்சந்திரன்
பொருளாளர்: திரு.சோமசுந்தரம் கிருஸ்ணரட்ணம்

**நிர்வாக உறுப்பினர்கள்:**

1). திரு.தம்பிஜயா பரமானந்தராசா
2). திருமதி ஞானாம்பிகை குணரத்தினம்
3). திரு.பிரமேந்திரதீசன் திரவியநாதன்
4).திரு .மனோகரன் அரியரத்தினம்
5). செல்வி சகானா குணரத்தினம் (இளையோர் ஒருங்கிணைப்பாளர்)

**உள்ளக கணக்காய்வாளர்:**

திரு.பஞ்சலிங்கம் கந்தையா.

**திட்டமிடல் போசகர் சபை உறுப்பினர்கள்**

1). திரு.சபாரத்தினம் பாலச்சந்திரன்
2). திரு.சோமசுந்தரம் கணேசபிள்ளை
3). திரு.நற்குணம் பாலேந்திரன்.

## காரைநகர் பிரதேச சபையின் தவிசாளராக திரு.கணேசபிள்ளை பாலச்சந்திரன் அவர்கள்



காரைநகர் பிரதேச சபையின் தவிசாளராக கடமையாற்றிய திரு.விஜயதர்மா கேதீஸ்வரதாசன் அவர்களின் மறைவின் பின்னர் வெற்றிடமாக தவிசாளர் பதவிக்கு சுழற்சி முறையில் தவிசாளர்கள் பதவியேற்றுக்கொள்வார்கள் என சபை உறுப்பினர்களின் முடிவையடுத்து 05.11.2021 முதல் திரு.மயிலன் அப்புத்துரை அவர்கள் தவிசாளராக பதவியேற்றார். அதன் பின்னர் 23.08.2022 முதல் திரு.கணேசபிள்ளை பாலச்சந்திரன் அவர்கள் தவிசாளராக பதவியேற்றுக்கொண்டுள்ளார்.

# யா/காரைநகர் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்-கனடா

## J/KARAINAGAR HINDU COLLEGE OLD STUDENTS ASSOCIATION - CANADA

**செய்திகள்**

காரைநகர் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் கனடாவில் ஆரம்பிக்கப்பட்டு 2022 செப்டெம்பர் மாதத்துடன் 10 ஆண்டுகளை பூர்த்தி செய்துள்ளது. காரைநகர் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் கனடாவில் 01.08.2012ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு பல கோடி ரூபாய்கள் மதிப்பில் காரைநகர் இந்துக் கல்லூரியின் கல்வி வளர்ச்சியிலும் பௌதீக வளர்ச்சியிலும் நிர்வாகத்திற்கான உதவிகளை புரிந்தும் பெரும் பங்காற்றி வருகின்றது.

2014ம் ஆண்டு 15 இலட்சம் நிரந்தர வைப்புடன் பழைய மாணவர் சங்கத்தின் ஊடாக ஆரம்பிக்கப்பட்ட மருத்துவ கலாநிதி வி.விஜயரத்தினம் நம்பிக்கை நிதியம் தொடர்ந்து வி.விஜயரத்தினம் அவர்களால் வழங்கப்பட்டுவரும் நிதியினால் 30 இலட்சம் ரூபாய்கள் வரை வளர்ச்சி பெற்றுள்ளது. இதன் மூலம் பெறப்படும் வங்கி வட்டி நிதியில் இருந்து வருடந்தோறும் பரிசளிப்பு நிகழ்வு, விளையாட்டு போட்டிக்கான செலவு மற்றும் இன்னோரென்ன வருடாந்த செலவுகள் நிவர்த்தி செய்யப்படுகின்றன.

மேலும் பழைய மாணவர் சங்கத்தின் ஊடாக 2020ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட நிரந்தர வைப்பு நிதியில் இதுவரை 20 இலட்சம் ரூபாய்கள் நிரந்தர வைப்பில் இடப்பட்டுள்ளதுடன் 2022 ஒக்டோபர் மாதம் நடைபெற்ற பத்தாவது ஆண்டு இன்னிசை விழாவின் மூலம் திரட்டப்பட்ட நிதியான 25 இலட்சம் ரூபாய்கள் கடந்த நவம்பர் மாதம் நிரந்தர வைப்பு நிதியில் சேர்க்கப்பட்டுள்ளது. மொத்தம் இந்த நிரந்தர வைப்பு நிதியில் 45 இலட்சம் ரூபாய்கள் உள்ளன.

அமரர் சி.குமாரவேலு ஞாபகர்த்தமாக தொழிலதிபர் திரு.மகாதேவன் பாலசுப்பிரமணியம் அவர்களால் மாணவர் ஊக்குவிப்பு உதவித்திட்டத்திற் காக மேலும் 5 இலட்சம் ரூபாய்கள் பழைய மாணவர் சங்கத்தினால் நிரந்தர வைப்பில் இடப்பட்டன.

பாடசாலை விஸ்தரிப்பிற்காக வடக்கு பகுதியில் அமைந்திருந்த பத்து பரப்பு காணியினை கொள்வனவு செய்வதற்காக பழைய மாணவர் சங்கத்தினரால் முழுமையாக உதவப்பட்டது. இது போன்ற நிரந்தர உதவி திட்டங்களுடன் கடந்த பத்து ஆண்டுகளில் எண்ணிலடங்காக பல்வேறு வருடாந்த, மாதாந்த பாடசாலையின் தேவைகளிற்காக கனடா காரை இந்து பழைய மாணவர் சங்கத்தின் ஊடாக கனடாவில் இருந்து பல வேறு பழைய மாணவர்கள் மற்றும் விளம்பரதாரர்கள் ஊடாக பெறப்பட்ட நிதி பாடசாலை -யின் வளர்ச்சியில் உதவப்பட்டுள்ளன.

கனடா காரை இந்து பழைய மாணவர் சங்கம் ஆரம்பிக்கப்பட்டு பத்து ஆண்டுகளில் கனடா வாழ் காரைநகர் மக்களிடத்திலே நன்மதிப்பை பெற்று பெரும் வளர்ச்சி கண்டுள்ளதற்கு காரணமாக அமைந்தது பழைய மாணவர் சங்கத்தின் நிர்வாகத்தினரின் இடைவிடாத முயற்சியும் அர்ப்பணிப்புடனுமான சேவையுமே.

பழைய மாணவர் சங்கத்தின் ஊடாக பாடசாலை செய்திகளையும் பாடசாலையின் தேவைகளையும் தெரிவித்து வருவதுடன் பழைய மாணவர் சங்கத்தின் செயற்பாடுகள் மற்றும் நிதி அறிக்கைகளை தெளிவுற தெரியப்ப டுத்தி வருவதுடன் அங்கத்தவர்களுடனான தொடர்புகளை பேணி வருவதும் கனடா காரை இந்து பழைய மாணவர் சங்கத்தின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றி வருகின்றது.



20.11.2022 அன்று பழைய மாணவர் சங்கத்தினல் இந்த வருடம் வைப்பில் இடப்பட்ட 25 இலட்சம் ரூபாய்கள் நிரந்தர வைப்பு சான்றிதழை வழங்குகின்றார் சங்கத்தின் பொருளாளர் திருமதி பிரபா ரவிச்சந்திரன்.

01.09.2022 அன்று கனடாவில் நடைபெற்ற 10வது ஆண்டு நிறைவு விழாவின் பதிவுகள் சில கீழே எடுத்து வரப்பட்டுள்ளன.







**காரைநகர் இந்துக் கல்லூரி செய்திகளிற்கு**
**www.karaihinducanada.com**

**காரைநகர் பண்டத்தரிப்பான்புலம் சிவகாமி அம்பிகா சமேத ஸ்ரீ சிதம்பரரேஸ்வரர் தேவஸ்தான கும்பாபிஷேகம் 29.08.2022 அன்று நடைபெற்றது**




















# 2021ம் ஆண்டுக்கான 5ம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் காரை முன்பள்ளிகளில் இருந்து 27 மாணவர்கள் புலமைச்சித்தி பெற்றார்கள்

## சுப்பிரமணியம் வித்தியாசாலை


கி.பவித்திரா 167 புள்ளிகள்


செ.தர்ஷன் 166


கே.சுயந்தன் 161


அ.பிரணவி 159


தே.டிலக்ஷன் 155


இ.தர்மிகா 153


நா.ஹம்சி 151


த.வாசுகி 151


க.தனுஷ் 148

## ஊரி அ.மி.த.க.பாடசாலை


சா.ஆருஜா 160


தே.பவதாரணி 160


க.கம்ஷிகா 149


கி.திலக்சனா 149

## மெய்கண்டான் வித்தியாசாலை


K.லக்ஷன் 161


L.சுகன்யா 153


M.நபீஷா 149

## வலந்தலை தெற்கு(அப்புத்துரை) அ.மி.த.க.பாடசாலை


சி.கஜானன் 168


வி.திவியன் 161


ப.மாதுரி 152

## யாழ்ற்ரன் கல்லூரி (கோவிந்தர் பாடசாலை) கனிஷ்ட வித்தியாசாலை


க.ஷாரங்கன் 167


சி.மனோகரன் 156


ஜெ.தர்சிகன் 151

## ஆயிலி சிவஞானோதயா வித்தியாசாலை


சி.தனுஷன் 166


பி.பிரசன்னா 162


வி.அகர்ஷன் 149

## வலந்தலை வடக்கு (சடையாளி) அ.மி.த.க.பாடசாலை


அ.திரிஷா 154


கோ.சதுஷா 151

**காரைநகர் செய்திகள் உடனுக்குடன் தினம் தினம் பார்த்து அறிந்து கொள்ள**

**www.karainews.com**

## ‘எனது ஊர் காரைநகர்’ சார்பில் காரைநகர் முன்பள்ளி மாணவர்கள் 75 பேர்களிற்கு சிறுவர் சேமிப்பு கணக்கு திறந்து வைக்கப்பட்டது

தேசிய சேமிப்பு வங்கி மற்றும் அஞ்சல் திணைக்களத்தின் ஊடாக சிறுவர் சேமிப்பு பழக்கத்தினை ஊக்குவிக்கும் முகமாக அறிமுகம் செய்யப்பட்ட திட்டத்தின் மூலம் காரை நகர் முன்பள்ளி மாணவர்கள் 75 பேருக்கு தலா 1000 ரூபா வைப்பில் இட்டு சேமிப்பு கணக்கு திறந்து கொடுக்கப்பட்டது.

இதன் மூலம் தேசிய சேமிப்பு வங்கி மேலும் 1000 ரூபா ஒவ்வொரு கணக்கிற்கும் வைப்பில் இட்டு வழங்கியது. 2022 மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் சிவகௌரி முன்பள்ளி, அம்பாள் முன்பள்ளிகளில் கல்வி பயிலும் 70 சிறார்களிற்கு தலா 1000 ரூபாவும், வலந்தலை தெற்கு அ.மி.த.க.பாடசாலை(சடையாளி), சுப்பிரமணியம் வித்தியாசாலை ஆகிய பாடசாலைகளில் கல்வி பயின்று புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் மாணவர்கள் ஐவருக்கு தலா 5000 ரூபா வீதமும் வைப்பில் இட்டு வழங்கப்பட்டது.





அத்துடன் சிவகௌரி முன்பள்ளி மாணவர்களிற்கு சத்துணவு வழங்கும் திட்டத்திற்கு ஆதரவாக 65,000 ரூபாவும் வழங்கப்பட்டது. மேலும் தொடர்ந்து இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியால் சத்துணவு திட்டம் இடைநிறுத்தப்பட்டவேளை ஆகஸ்ட், செப்டெம்பர் ஆகிய இரு மாதங்களிற்கும் சத்துணவு வழங்க தேவையான மொத்த நிதியான 80,000 ரூபாவும் வழங்கப்பட்டது.

சத்துணவு திட்டத்திற்கான நிதியினை மலேசியாவில் வாழும் முன்னாள் காரை உறவான திருமதி சரஸ்வதி இராஜகோபால் அம்மா அவர்கள் வழங்கியிருந்தார். புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களிற்கு வழங்கப்பட்ட நிதி 25,000 ரூபாவினை கனடாவில் வதியும் திருமதி சுந்தரேஸ்வரி சச்சிதானந்தன் அவர்களும் ‘எனது ஊர் காரைநகர்’ ஊடாக வழங்கியிருந்தார்கள்.



## கல்வி ஊக்குவிப்பு நிதி ஏழு மாணவர்களிற்கு வழங்கப்படுகின்றது

காரைநகர் பாடசாலைகளில் கல்வி பயிலும் ஏழு மாணவர்களிற்கு மேலதிக ரியூசன் வகுப்புகளிற்கு செல்வதற்கான நிதி மாதாந்தம் ‘எனது ஊர் காரைநகர்’ ஊடாக வழங்கப்படுகின்றது.

நன்றாக கல்வி கற்கும் மாணவர்கள் சிலர் மேலதிக ரியூசன் வகுப்புகளிற்கு செல்வதற்கு அவர்களது குடும்ப சூழ்நிலைகள் காரணமாக நிதி வசதியற்ற நிலையில் இருந்து வருவதாகவும், கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் வெளியிடங்களை சேர்ந்தவர்களாக இருப்பதாலும் மாணவர் தொகைக்கு ஏற்ப ஆசிரியர்களின் வேதனம் வழங்கப்பட்டு வருவதாலும் கல்வி நிலையங்களில் மேலதிக வகுப்புகளிற்கான நிதி கடந்த சில ஆண்டுகளாக ‘எனது ஊர் காரைநகர்’ மூலம் வளங்கப்பட்டு வந்துள்ளது.

இந்த வருடம்(2022) மேலும் ஏழு மாணவர்களிற்கான நிதி வழங்கப்படுகின்றது. ஆறு மாணவர்களிற்கான நிதி உதவியினை சுவிஸ் நாட்டில் வதியும் திரு.சண்முகநாதன் பரமசாமி அவர்களும் ஒரு மாணவருக்கான நிதியினை கனடாவில் வதியும் திருமதி சுந்தரேஸ்வரி சச்சிதானந்தன் அவர்களும் வழங்கி வருகின்றார்கள்.

## பல்கலைக்கழக மாணவர்களிற்கான நிதியுதவி

காரைநகரில் கல்வி பயின்று பல்கலைக்கழகங்களிற்கு தெரிவான நான்கு மாணவர்களிற்கு ‘எனது ஊர் காரை நகர்’ ஊடாக தொடர்ச்சியாக நான்கு ஆண்டுகளிற்கு மாதாந்தம் 10,000 ரூபா வீதம் வழங்கப்பட்டு வருகின்றது.

திரு.கனகரத்தினம் ஈஸ்வரபாதம் (அவுஸ்திரேலியா)

திரு.நாகலிங்கம் குஞ்சிதபாதம் (கனடா)

திரு.தீசன் திரவியநாதன்(கனடா) ஆகியோரினால் வழங்கப்படுகின்றது.

எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் பிரான்ஸ் நாட்டில் வதியும் திரு.கணேஸ் மயில்வாகனம் அவர்கள் மேலும் ஒரு மாணவிக்கான உதவியினை வழங்க முன்வந்துள்ளார் என்பதுடன் சடையாளியில் வதியும் மாணவியின் குடும்ப சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு மாதாந்தம் 20,000 ரூபாய்கள் வழங்கவும் முன்வந்துள்ளார்.

# இன்றைய காரைநகரும் கல்வியும் தொழிலும்...2022



யாழ் மாவட்டத்தில் உள்ள 15 பிரதேச செயலர் பிரிவுகளில் ஒன்றான காரைநகர் ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவிலிருந்து 2003ம் ஆண்டு தனியான பிரதேச செயலர் பிரிவாக உருவாக்கப்பட்டுள்ளது. யாழ் நகரிலிருந்து 24 கிலோமீற்றர் தொலைவில் உள்ள 27 சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்ட அழகிய தீவான காரைநகரில் இன்று 3661 குடும்பங்களைச் சேர்ந்த 10,741 பேர் வசித்து வருகின்றனர். காரைநகில் 1991இல் ஏற்பட்ட இடப்பெயர்வுக்கு முன்னர் 40ஆயிரம் மக்கள் வாழ்ந்ததாகச் சொல்லப்படுகின்றது. மக்கள் 96இற்குப் பின்னர் படிப்படியாகக் குடியேறி இன்று 10,741 பேர் வசித்து வருகின்றனர்.

விவசாயம், மீன்பிடி, வர்த்தகம் போன்றவற்றைப் பிரதான தொழிலாகக் கொண்ட மக்களே அதிகம் காணப்படுகின்றனர். இங்குள்ளவர்களில் பெரும்பாலானவர்கள் மிகவும் வறியவர்களாகவே காணப்படுகின்றனர். இங்கிருந்தவர்களில் வசதி படைத்த பெரும்பாலானவர்கள் பிள்ளைகளின் கல்வி மற்றும் தொழில் வாய்ப்புக்களுக்காக யாழ் நகரத்திலும் நாட்டின் ஏனைய பகுதிகலிலும் பரந்து வாழ்கின்றனர். இவர்களில் பெருமளவானோர் புலம்பெயர் தேசங்களிலும் வசித்து வருகின்றனர்.




இங்கு போக்குவரத்து, கல்வி, சுகாதார வசதிகள் ஓரளவு சிறப்புற்றுக் காணப்பட்டாலும் குடிநீர் வசதி போதியளவு இன்மையால் மக்கள் யாழ்நகரை நாடிச் செல்வது அண்மைக்காலமாக அதிகரித்துக் காணப்படுகின்றது.
இங்கு 14 பாடசாலைகள் மாணவர்களுக்குக் கல்வியை வழங்கி வருவதுடன் 15 பாலர் பாடசாலைகளும் மழலைகளின் கல்வி வளர்ச்சியில் அக்கறை செலுத்தி வருகின்றன. காரைநகருக்கான தனியான கல்விக் கோட்டம் காணப்படுவதுடன் தீவக கல்வி வலயத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இங்கு 2040 மாணவர்கள் கல்வி பயில 168 ஆசிரியர்கள் கல்விச் செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்றனர்.

காரைநகருக்கு தனியான சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை அமைக்கப்பட்டுள்ளதுடன் காரைநகர் அரசினர் வைத்தியசாலையும் செயற்பட்டு வருகின்றது. இங்கு நாளாந்தம் 80 மேற்பட்ட நோயாளர்கள் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றுச் செல்வதுடன் சராசரி 15 பேர் தங்கிச் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

**காரைநகரில் வாழும் மக்கள் தங்கள் பிள்ளைகளின் கல்வித் தேவைகளுக்காக யாழ்நகரை நோக்கிச் செல்கிறார்கள் தினசரி 75 இற்கும் மேற்பட்ட பிள்ளைகள் அதிகாலை 6.00 மணிக்கே வீதிக்கு வந்துவிடும் அவலம். காரைநகரில். 14 பாடசாலைகள் தலைநிமிர்ந்து நிற்கின்றன. எதற்காக அவர்கள் யாழ்நகரை நோக்கிச் செல்லவேண்டும்.**

இங்கு தனியான இலங்கைப் போக்குவரத்துச் சபை டிப்போ அமைக்கப்பட்டுள்ளதுடன் 30க்கும் மேற்பட்ட பேரூந்துகள் சேவையில் ஈடுபடுவதுடன் 140 இற்கும் மேற்பட்ட ஊழியர்கள் பணியாற்றுகின்றனர். தனியார், அரச பேரூந்து சேவைகள் ஈடுபடுவதுடன் சிறந்த போக்குவரத்து சேவைகளையும் அவை வழங்கி வருகின்றன.

இங்கு சைவ சமயத்தவர்களே அதிகமாக வசிக்கிள்றனர். 53 ஆலயங்கள் காணப்படுவதுடன் ஈழத்தின் பிரசித்தி பெற்ற சிவாலயமான ஈழத்துச் சிதம்பரமும் இங்கு அமைந்துள்ளது. இரு கிறிஸ்தவத் தேவாலயங்களும் காணப்படுகின்றன. மக்களின் வறுமையைச் காரணமாக வைத்து மதமாற்றங்களும் தாராளமா நடந்தேறி வருகின்றது. இடப்பெயர்வுக்கு முன்னர் 30 ஆகக் காணப்பட்ட கிறிஸ்தவ மதத்தினரின் தொகை இன்று 417 ஐயும் தாண்டி உள்ளது.



இங்கு 1200 ஏக்கர் நிலத்தில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. 344 விவசாயிகள் நெற்செய்கையினை மேற்கொண்டு வருவதுடன் 202 பேர் விவசாயக் கூலிகளாகப் பணியாற்றுகின்றனர். இங்கு தனியான கமநல சேவைகள் நிலையம் அமைக்கப்பட்டு விவசாயிகளுக்கு வழிகாட்டுதல்களையும் மாணியங்களையும் வழங்கி வருகின்றது.

இங்கு வாழ்பவர்களில் அதிகமானோர் கடற்தொழிலையே செய்து வருகின்றனர். 1109 பேர்



மீன்பிடித் தொழிலை மேற்கொண்டு வருவதுடன் மீனவக் கூலிகளாக 349 பேர் வேலை செய்கின்றனர். ஒரு கடற்தொழிலாளர் சமாசமும் 5 கடற்தொழில் சங்கங்களும் இங்கு கடற்தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும் அவர்களுக்கான சேவைகளை வழங்கவும் செயற்பட்டு வருகின்றது.

கட்டட வேலை செய்பவர்களாக 175 பேரும் தச்சுத் தொழிலை 43 பேரும் வெல்டிங் வேலையினை 09 பேரும் மேற்கொண்டு வருவதுடன் கூட்டுறவுத் துறையில் 09 பேரும் தனியார் துறையில் 166 பேரும் அரச துறையில் 320 மேற்பட்டோரும் பணியாற்றுகின்றனர்.

சுயதொழில் முயற்சிகளாக நல்லெண்ணை ஊற்றுதல், பனம்பொருள் உற்பத்தி, ஊதுபத்தி உற்பத்தி, தையல், கோழி வளர்ப்பு, பசுவளர்ப்பு, ஆடு வளர்ப்பு, தேனி வளர்ப்பு, சிறு பெட்டிக் கடைகள் எனப் பல்வேறு தொழில் முயற்சிகளும் இடம்பெற்று வருகின்றது. இதில் 150 இற்கும் மேற்பட்டவர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.
வங்கிச் செயற்பாடுகளில் இலங்கை வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, கிராமிய வங்கி, சமுர்த்தி வங்கி, என்பவற்றுடன் மக்கள் வங்கியின் தன்னியக்கப் பணப் பரிமாற்று இயந்திரமும் சேவையாற்றி வருகின்றன. அவற்றுள் காரைநகர் சமுர்த்தி வங்கி நுண்நிதிக் கடன்களை அதிகளவில் வழங்கி வரும் வங்கியாகக் காணப்படுவதுடன் சமுர்த்தித் திட்டத்தின் ஊடாக பல்வேறு பட்ட அரச உதவித் திட்டங்கள், வாழ்வாதார உதவித் திட்டங்கள் என்பன வழங்கப்பட்டு வருகின்றன.

இங்கு குடிநிர்ப் பிரச்சினை பாரிய பிரச்சினையாகக் காணப்படுகின்றது. இங்கு காணப்படும் கிணறுகள் பெரும்பாலானவை உவர்நீராகக் காணப்படுவதுடன் அவையும் யூலை மாதத்துடன் வற்றி வரண்டு விடுகின்றன. இதனால் வெளியூர்களிலிருந்தே குடிநீர் கொண்டு வரப்படுகின்றன. பிரதேச சபை, தனியார், பொது அமைப்புக்கள் எனப் பல தரப்பினரும் பவுஸர்கள் மூலம் குடிநீரினை வெளியிடங்களில் இருந்து கொண்டுவந்து பணத்திற்கு மக்களுக்கு விநியோகிக்கின்றனர். அதிக பணம்கொடுத்து தண்ணீரைப் பெற்றுக்கொள்ள வேண்டியவர்களாக இங்குள்ள மக்கள் காணப்படுகின்றனர். மிக வறியவர்களாகக் காணப்படும் இவர்கள் தண்ணீரைக் காசுக்குப் பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்ககின்றனர்.



இங்கு காணப்படும் சுற்றுலா மையமான கசூரினாக் கடற்கரைக்குத் தினமும் அதிகளவான சுற்றுலாவிகள் வருகை தருகின்றார்கள். பிரதேச சபையின் பராமரிப்பில் காணப்படும் இக் கடற்கரையில் 20க்கும் மேற்பட்ட குடும்பங்கள் சுயதாழில் மேற்கொண்டு வருவாயைப் பெற்று வருகின்றனர்.

காரைநகரில் கல்விப் பொதுத் தராதர உயர்தரக் கல்வி வரை வழங்கும் இரு பாடசாலைகளும் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரக் கல்வி வரை வழங்கும் 04 பாடசாலைகளும் ஏனைய பாடசாலைகள் தரம் 05 வரையும் கல்விச் செயற்பாடுகளை முன்னெடுக்கின்றன. தரம் 5 வரை கற்பிக்கும் 11 பாடசாலைகளிலும் 663 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். இவர்களில் பலர் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்ததும் யாழ் நகரின் பிரபல பாடசாலைகளுக்குச் செல்கின்றனர். மேலும் பலர் அடுத்த அடுத்த வகுப்புகளில் வெளியிடம் செல்கின்றனர்.



காரைநகர் பாடசாலைகள் சிறந்த பௌதீக வளங்களையும் ஆசிரிய வளங்களையும் கொண்டு யாழ் நகரப் பாடசாலைகளுக்கு இணையாக இருந்த போதிலும் மாணவர்கள் இங்கு ஏன் கல்வி கற்கத் தயங்குகிறார்கள் என மூத்த கல்வி அதிகாரியிடம் கேட்ட போது இங்குள்ள அதிபர் ஆசிரியர்கள் இறங்கி வேலை செய்யத் தயங்குகிறார்கள். முன்னைய காலங்களில் பாலர் பாடசாலைகளுக்கு தங்கள் ஆசிரியர்களை அனுப்பி தங்கள் பாடசாலைகளில் பிள்ளைகளை
இணைத்துக் கொள்வதற்காக பெற்றோருக்கு விழிப்புணர்வு ஊட்டி தங்கள் பாடசாலையின் சிறப்புக்களை எடுத்துக் கூறி



பிள்ளைகளை சேர்ப்பார்கள். அதே போலத்தான் ஆரம்பப் பாட-சாலைகளுக்குச் சென்று தரம் 06 இற்கும் மாணவர்களைச் சேர்ப்பார்கள். அப்போது பெற்றோர்களுக்கு விழிப்புணர்வூட்டி பாட-சாலைகளுக்கு இணைத்துக் கொள்வார்கள். அதனால் பெற்றோர் யாழ் நகருக்குப் பிள்ளைகளை அனுப்பவேண்டிய தேவை அன்று ஏற்படவில்லை. ஆனால் இன்று அவ்வாறு அதிபரோ, ஆசிரியர்களோ செல்வதற்குத் தயக்கம் காட்டுகின்றனர். இதனால் காரைநகர் பாட-சாலைகள் பற்றிய விழிப்புணர்வு பெற்றோர் மத்தியில் இல்லாமையால் அவர்கள் யாழ் நகரை நோக்கிப் படைஎடுக்க வேண்டி உள்ளதாக அவர் குற்றம் சுமத்துகிறார்.



மேலும் பாடசாலை நேரக் கல்வியுடன் அவர்கள் நிறுத்துகிறார்கள், கடந்த காலங்களில் மேலதிக கற்பித்தல் செயற்பாடுகள் இடம்பெறும். ஆங்கிலம் மற்றும் கற்றலில் பின்தங்கி நிற்கும் மாணவர்களுக்கு காலை, மாலைக-ளில் விசேட வகுப்புக்கள் நடத்தப்படும். ஆனால் இன்று அவ்வாறான கற்பித்தல் செயற்பாடுகள் இடம்பெறுவதில்லை.
ஆசிரியர்களின் அர்ப்பணிப்பும் குறைந்து கொண்டே போவதாக அவர் குற்றம் சுமத்தினார். அத்துடன் கடந்த காலப் பெறுபேறுகளுடன் ஒப்பிடும் போது மாணவர்களின் பெறுபேறுகளும் வீழ்ச்சி அடைந்து கொண்டே செல்கிறது எனவும் குற்றம் சுமத்தினார்.




3661 குடும்பங்களைச் சேர்ந்த 10741 பேர் வசிக்கும் காரைநகரில் 1745 பிள்ளைகள் 12 பாடசாலைகளிலும் கற்று வருகின்றனர் இங்குள்ள மாணவர்களில் 5 சதவீதத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் யாழ் இந்துக்கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி ஆகிய பிரபல பாடசாலைக-ளிலும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி, யாழ் மத்திய கல்லூரி, யாழ் இந்து மகளீர் கல்லூரி ஆகிய பாட-சாலைகளிலும் கற்று வருகின்றனர். இவர்கள் தினமும் பல மணி நேரங்களை போக்குவரத்திலே செலவிடுகின்றனர் இன்று அதிகரித்துள்ள போக்குவரத்துக் கட்டணமும் விலைவாசி அதிகரிப்பும் இவர்களுக்குப் பெரும் சவாலாக அமைந்துள்ளது.



காரைநகரில் தனியான பஸ் டிப்போ அமைந்திருந்தும் பாடசாலை சேவையினை நடாத்துவதற்கு மறுக்கின்றார்கள். அவர்களும் மக்களுக்குச் சேவை செய்வதை விடுத்து அதிகலாபம் ஈட்டுவதையே குறியாகக் கொண்டுள்ளனர். எனச் சீறுகின்றனர் பெற்றோர் பல தடவைகள் பாடசாலை பஸ் சேவையை நடத்துமாறு கேட்டும் பலன் இல்லை என்கின்றனர் பெற்றோர். பஸ் பற்றாக்குறை, ஊழியர் பற்றாக்குறை எனச் சாட்டுச் சொல்லும் இவர்கள் இலங்கையின் பல பாகங்களுக்கும் பஸ்களைச் சேவையில் ஈடுபடுத்துகின்றனர். அதற்கு பஸ்களும் ஊழியர்களும் தாராளமாக உள்ளதா எனக் கேள்வி எழுப்புகின்றனர் அவர்கள்.

பாடசாலைகள் விடும் நேரத்திற்குக் கூட பஸ்களை ஒழுங்காகச் சேவையில் ஈடுபடுத்துவதில்லை யாழ் நகரிலிருந்து காரைநகருக்கு வரும் பஸ்களில் பாடசாலைச் சிறார்கள் மிதிபலகையில் தொங்கிக்கொண்டு வரும் அவலமும் காணப்படுகின்றது.



பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் காரைநகருக்கு வெளியே உள்ள பாட-சாலைகளுக்கு என் மாணவர்கள் செல்ல வேண்டும் இது தொடர்பாக யாரும் சிந்திப்பதில்லை அந்தப் பாடசாலைகளுக்கு இணையான வசதி-களை ஏற்படுத்தினால் அவர்களும் இங்கு கற்கலாம். கல்விக்காக தற்போது இடம்பெறும் இடப்பெயர்வுகளையும் தவிர்த்துக்கொள்ளலாம்.

# “ காரைநகர் சேவையாளர்கள் “

கனடாவில் இருந்து வெளியாகும் ‘எனது ஊர் காரைநகர்’ சஞ்சிகை மற்றும் www.karainews.com இணையத்தளம் சார்பாக காரைநகர் சேவையாளர்களை கௌரவிக்கும் திட்டம் 2017ம் ஆண்டு டிசம்பரில் ஆரம்பித்து வைக்கப் பட்டது.

முதல் தடவையாக 2017.12.31 அன்று 20 காரைநகர் சேவையாளர்கள் பல்வேறு பணிகளிற்காக கௌரவம் செய்யப்பட்டு பொற்கிளி வழங்கி கௌரவிக்கப்பட்டனர். அதன் பின்னர் 2020.01.05 அன்று இரண்டாவது தடவையாக 15 காரைநகர் சேவையாளர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

‘எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு’

அது ஒரு பக்கம் இருக்க போரிற்கு பின்னர் மக்களிடையே பொதுப்பணி, சிரமதானம், ஊரிற்கான நீண்டகால சிந்தனை செயற்பாடுகளிற்கான திட்டங்களை செயற்படுத்த தன்னல மற்ற வகையில் உழைப்பதற்கு பலரும் முன்வருவதில்லை. தன்னலமற்ற வகையில் சமுதாக முன்னேற்றம் கருதி செயற்படுவதற்கு எக்காலத்திலும் கைவிட்டு எண்ணக் கூடியவர்களே அர்ப்பணிப்புடன் சேவையாற்றி வந்துள் ளார்கள். அதுவும் போர்க்காலத்தின் பின்னர் மிகமிக குறை-வடைந்து சென்றுள்ள நிலையில் மீண்டும் 1980ம் ஆண்டுக்கு முன்னைய ஊர் ஒற்றுமையினை உருவாக்கும் பொருட்டு மேலும் பொதுப் பணியாளர்களை தன்னலமற்ற வகையில் செயற்பட ஊக்குவிக்கவும் அவர்களை அடை யாளப்படுத்தவுமே இத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இரண்டு ஆண்டுகளிற்கொரு முறை இத்திட்டத்தின் மூலம் வளர்ந்து வரும் சேவையாளர்கள் அடையாளப்படுத்தப்பட்டு கௌரவம் வழங்கவும் ‘எனது ஊர் காரைநகர்’ www.karainews.com தீர்மானித்துள்ளதுடன் அதற்காக காரைநகர் அபிவிருத்தி சபை நிர்வாகமும் ஆதரவு வழங்கி வருகின்றது.

மூன்றாவது தடவையாக 01.01.2023 அன்று மேலும் காரைநகர் சேவையாளர்கள் கௌரவிக்கப்படுவதோடு காரைநகர் மண்ணின் வளர்ச்சியில் பொதுநோக்கோடு செயற்பட்டு சிரமதானம், தொண்டுகள் செய்து வரும் அமைப்புக்களும் கௌரவிக்கப்படுகின்றன. கடந்த இரண்டு சேவையாளர் கௌரவத்தின் போது கௌரவிக்கப்பட்ட சேவையாளர்களது விபரங்கள் எடுத்து வரப்பட்டுள்ளன.




1. **சிவஸ்ரீ நா.ஞானசம்பந்தகுருக்கள்** 1991 - 1996 வரையான ஈழத்து சிதம்பர சிவப்பணி
2. **சிவஸ்ரீ வி.ஈஸ்வரகுருக்கள்** - சிவப்பணி
3. **திரு.க.தில்லையம்பலம்** - கல்வி மற்றும் சமய சமூக பணி
4. **திரு.வே.செல்வநாயகம்** - ஈழத்து சிதம்பரம் ஐயனார், சிவன் இரஜகோபுர திருப்பணி
5. **திருமதி சூரியா சிவரூபன்** - காரை மாணவர்களிற்கான கல்விப்பணி
6. **திரு.க.சோமசேகரம்** - வியாவில் ஐயனார் தேவஸ்தானம் ஊடான சமய சமூக பணி
7. **திரு.சண்முகம் சிவஞானம்** - சமய மற்றும் கலைப்பணி
8. **திரு.ந.பாக்கியராஜா** - ஈழத்து சிதம்பரம் ஐயனார், சிவன் இரஜகோபுர திருப்பணி
9. **திரு.சபாரத்தினம் மனோகரன்** - களபூமி பிரதேச வளர்ச்சியின் ஈடுபாட்டாளர்
10. **திரு.சங்கரப்பிள்ளை குகராஜா(குகன்)** சிரமதானம், சமுதாய அக்கறை, இளம் விவசாயி
11. **அமரர் சு.முருகேசு** - ஈழத்து சிதம்பரம் ஐயனார், சிவன் இராஜகோபுர திருப்பணி
12. **அமரர் வே.சிவசுப்பிரமணியம்** (10.40 மணியம்) ஈழத்து சிதம்பரம் ஐயனார், சிவன் இராஜகோபுர திருப்பணி.
13. **அமரர்.அ.சி.சிவலிங்கம்** - மணிவாசகர் சபை மற்றும் ஐயனார் சிவன் இராஜகோபுர திருப்பணி
14. **அமரர் ஜெ.தில்லையம்பலவாணர்** காரைநகர் அபிவிருத்தி சபை உருவாக்கம்
15. **அமரர் சபாபதி சபாரத்தினம்** - பிரித்தானியா காரை நலன்புரிச் சங்கம் ஆரம்பகர்த்தா.

## 2017 ' காரைநகர் சேவையாளர் ' கௌரவம் வழங்கப்பட்ட சேவையாளர்கள்

**1.மருத்துவர் சுப்பிரமணியம் நடராசா**
காரைநகர் மாணவர் நூலக அமைப்பிற்கான செயற்பாடுகளிற்கு மூல காரணமாக விளங்கியவர்

**2. திரு. வே.முருகமூர்த்தி (அதிபர்)**
யாழ்ற்ரன் கல்லூரியின் இன்றைய வளர்ச்சி

**3. பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை**
சமயம், கலை, அபிவிருத்தியில் முழுநேர பணி

**4. திரு. பு.ஶ்ரீவிக்கினேஸ்வரன்**
இளைப்பாறிய காரை கோட்டக்கல்வி அதிகாரி 2015இல் கனடா காரை கலாசார மன்றத்தின் ஊடாக பாடசாலைகளின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்ய வளங்கிய ஒரு கோடி இருபது இலட்சம் நிதி திட்டத்திற்கான திட்டமிடல் வரைபு.

**5. K.M.செல்வரத்தினம் (KMS)**
காரை மாணவர்களிற்காக 27 ஆண்டுகள் காரை இந்துவில் பணிபுரிந்த இளைப்பாறிய ஆசிரியர்.

**6. திரு. த.ஜெயசீலன்**
முன்னாள் காரைநகர் பிரதேசசெயலர், பதவிக்கும் மேலாக மக்களிற்காக பணி புரிந்து திட்டங்களை அமுல்படுத்தியவர்.

**7. திரு. வே.சபாலிங்கம்**
கந்தர் குண்டு மற்றும் சிரமதானம்

**8. திரு. இ.திருப்புகழூர்சிங்கம்**
தன்னலமற்ற கிராம சேவையாளர், தோப்புக்காடு காணி வளங்கல்

**9. திரு. இ.இராசதுரை**
தன்னலமற்ற கிராமசேவையாளர், யதார்த்தமாக மக்களை அணுகி செயற்பட வைப்பவர்

**10. திருமதி வாசுகி தவபாலன்**
காரை இந்து முன்னாள் அதிபர், 'காரை இந்து' என மீண்டும் பெயர் மாற்றம் பெற முக்கிய காரணமாக செயலாற்றியவர்.

**11. திரு. இ.சிறிதரன் (அதிபர்)**
முன்னாள் ஊரி பாடசாலை அதிபர், ஊரி அ.மி.த.க பாட-சாலையின் முன்னேற்றத்தின் முன்னோடி.

**12. திரு.திருச்செல்வம் தவரட்ணம்**
இளம் பட்டதாரி ஆசிரியர், அதிபர் அத்துடன் இதுவரை 61 புத்தகங்கள் வெளியிட்டுள்ளதுடன், சாதனையாளர்கள் பட்டியலில் இடம்பெற்றுள்ளார்.

**13. பண்டிதை செல்வி யோகலட்சுமி சோமசுந்தரம்**(யோகா ரீச்சர்)வெளிநாடுகளில் உள்ள காரை சங்கங்களின் ஊடாக காரை சிறார்களின் கலைவளர்ச்சிக்கு உதவி வருபவர்.

**14. திரு. கை.நாகராசா**
பெரியமணல், சிவகௌரி சனசமூக நிலையம், ஒய்வு பெற்ற நீதிமன்ற உதவியாளர், நாடக கலை பயிற்றுவிப்பாளர், சமுதாய முன்னேற்றத்திற்காக பாடுபடுபவர்.

**15. திரு.து.நாகேந்திரம்**
மணிவாசகர் சபையின் ஊடாக 25 ஆண்டுகளிற்கு மேலாக சமய தொண்டாற்றுபவர்.

**16. திரு. ந.கிருஷ்ணபவன்**
யாழ்ற்ரன் கல்லூரி உதவி அதிபர், சிவகாமி அம்மன் கோயிலடி, காரை மத்தியின் ஊடாக கணணி கல்வி மற்றும் வறிய பிள்ளைகளிற்கான தன்னலமற்ற வகையில் உதவிகளை பெற்றுக்கொடுப்பவர்.

**17. திரு.எஸ்.கே.சதாசிவம் மாஸ்ரர்**
அப்புத்துரை பள்ளிக்கூடத்தினை இரண்டாவது தடவையாக மீள திறப்பதற்கு பலவழிகளிலும் காரணமாக இருந்தவர்களில் முக்கியமானவர்.

**18. திருமதி நடராசா இராசமலர்**
களபூமி முத்தமிழ் மன்றத்தின் ஊடாக 50 ஆண்டுகளிற்கு மேலாக கலைப்பணி ஆற்றுபவர்.

**19. செல்வி வே.புஸ்பராணி**
ஆரம்ப பள்ளி இணைப்பாளர், 30 வருட சிறுவர் கல்வி சேவை.

**20. திரு.நாகலிங்கம் பாலகிருஸ்ணன்**
உள்ளூர் சிரமதானம் மூலம் இளைஞர்களை ஊக்குவிப்பவர்.




































19



# காரைநகர் அபிவிருத்தி சபையின் நிர்வாக கட்டமைப்பு அடங்கிய யாப்பு திருத்தம் செய்யப்பட்டுள்ளது 06.11.2022

காரைநகர் அபிவிருத்திச் சபை
மணற்காட்டு அம்மன் வீதி, காரைநகர், இலங்கை.
KARAINAGAR DEVELOPMENT SOCIETY
Manalkadu Amman Veethy, Karainagar, Sri Lanka.
Regd No. KR/AGA/SS/NGO/2006/02 Tel : 021 221 1757 E.mail : kdskarai@gmail.com

2005.01.28 அன்று முதல் காரைநகரில் பதிவு செய்யப்பட்டு இயங்கி வரும் காரைநகர் அபிவிருத்தி சபை கடந்த 18 ஆண்டுகளிற்கும் மேலாக காரைநகரில் பல்வேறு தரப்பட்டளவில் காரைநகர் மக்களிற்காக சேவைகள் புரிந்து வருகின்றது.

அவற்றுள் காரைநகர் மக்களிற்கான குடிநீர் வழங்கும் சேவையினை காரைநகரில் முதன்முதலில் ஆரம்பித்து வைத்ததுடன் இன்றுவரை தொடர்ச்சியாக அப்பணியில் ஈடுபட்டு வருவதையும், காரைநகர் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக 'அறிவகம்' என்னும் நூலகப்பணியினை செயற்படுத்தி வருவதும் இடைவிடாத பணிகளாக நடைபெற்று வருபவை. அத்துடன் காரைநகர் பாடசாலைகளின் அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்யும் வகையிலும் மாணவர்களின் கல்வி தேவைகளை ஊக்குவிக்கும் பொருட்டும் வெளிநாடுகளில் இயங்கி வரும் காரைநகர் அபிவிருத்தியை மையமாக கொண்டு செயற்பட்டுவரும் அமைப்புக்களுடன் தொடர்புகளை மேற்கொண்டு நிரந்தரமாகவும் தேவைகளிற்கு ஏற்பவும் பல்வேறுபட்ட கல்விப்பணிகளையும் ஆற்றி வருகின்றது.

காரைநகர் அபிவிருத்தி சபையின் வளர்ச்சிக்காக இதனூடாக தமது செயற்பாடுகளையும் திட்டங்களையும் செயற்படுத்தி காரைநகர் அபிவிருத்தி சபையின் பெயரையும் அதன் தொடர்ச்சியான வளர்ச்சியையும் விட்டுச்சென்ற பெரியவர்கள் பலர் உள்ளனர்.

அவர்களில் இச்சபையை ஆரம்பிக்க ஆலேசனைகள் வழங்கிய சுவிஸ் காரை அபிவிருத்தி சபையானது ஆரம்பகர்த்தாவாக அமரர் ஜெ.தில்லையம்பலவாணர் அவர்களை முன்னிறுத்தி ஆரம்பித்து வைத்தது. தொடர்ந்து அவருடன் முன்னாள் அதிபர்கள் திரு.ந.பரமசிவம், பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை, திரு.வே.முருகமூர்த்தி, வியாவில் ஐயனார் கோயில் அறங்காவலர் திரு.க.சோமசேகரம், அமரர் சிவா தி.மகேசன் இவர்களுடன் வைத்தியர் க.நடராசா அவர்களின் ஒப்பில்லா இடைவிடாத பணிகளின் ஊடாக 'அறிவாலயம்' எனும் மாணவர் நூலகத்தின் தோற்றம் என்பனவும் குறிப்பிடத்தக்கவையாக இருந்துள்ளன.

காலத்தின் மாற்றம், காரைநகர் மக்களிடையே காரைநகர் அபிவிருத்தி சபையின் முக்கியத்துவம் அதிகரித்து வரும் இக்காலப்பகுதியில் காரைநகர் அபிவிருத்தி சபையின் ஊடாக இணைந்து காரைநகர் மக்களிற்கான சேவைகளை வழங்குவதில் பலரும் ஆர்வம் கொண்டு வருகின்றனர். ஆனாலும் காரைநகர் அபிவிருத்தி சபையோடு இணைந்து காரைநகர் மக்களிற்கான சேவையினை ஆற்றுவதற்கு தன்னலமற்ற வகையில் காரைநகர் அபிவிருத்தி சபையின் வளங்களை பயன்படுத்தி வெளிநாடுகளில் வாழும் காரை - நகர் மக்களின் நிதியுதவியினை பெற்று காரை மண்ணின் அபிவிருத்தியில் ஈடுபடுவதற்கு காரைநகர் மக்களின் நலன்களிலும், காரை மண்ணின் வளர்ச்சியிலும் அதீத அக்கறையும் மறைமுகமாக வேறுபல தமது செயற்பாடுகளை முன்னிறுத்தி இச்சபையின் நிர்வாகத்தில் இணைந்து கொள்வதையும் அதன் மூலம் காரைநகர் அபிவிருத்தி சபை எதிர்காலத்தில் தடம் மாறிச்செல்வதையும் தவிர்க்க வேண்டிய நிலையில் காரைநகர் அபிவிருத்தி சபையின் நிர்வாக கட்டமைப்புக்கான யாப்பு திருத்தப்பட வேண்டிய கட்டாய தேவை எழுந்தது.

2019.08.11 அன்று காரைநகர் சைவமகா சபை மண்டபத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தின் போது தெரிவு செய்யப்பட்ட திரு.இராமநாதன் சிவசுப்பிரமணியம் தலை - மையிலான நிர்வாக சபையினரின் செயற்பாடுகள் 2020, 2021 ஆகிய வருடங்களில் கோவிட் பெருந்தொற்று காரணமாக மட்டுப்படுத்தப்பட்டளவில் இயங்கி வந்ததுவும், அக்காலப்பகுதியில் நடைபெற்ற செயற்பாடுகள் மற்றும் நிதி அறிக்கை என்பனவற்றை மக்களிற்கு தெரியப்படுத்தவும் தொடர்ந்து புதிய நிர்வாக சபையினை தெரிவு செய்யவும் 02.10.2022 அன்று களபூமி கலையகத்திலே தலைவர் திரு.இராமநாதன் சிவசுப்பிரமணியம் அவர்களது நிர்வாக சபையினால் பொதுக்கூட்டம் கூட்டப்பட்டது.

அதன் போது புதிய நிர்வாக சபைக்கு தெரிவாக பலத்த போட்டிகள் இடம்பெற்றுள்ளதும் பொதுக்கூட்டத்தினை சுமூகமாக நடாத்த முடியாத சூழ்நிலையும் ஏற்பட்டிருந்தது. பல மணிநேர பகீரதப்பிரயர்த்தனம் மூலம் யாப்பு திருத்தம் முக்கியம் எனவும் அதற்கென நால்வர் அடங்கிய யாப்பு திருத்த குழுவும் தெரிவு செய்யப்பட்டிருந்தது.

1). திரு.ஆறுமுகம் திருக்கேதீஸ்வரன்,
2).திரு.சுப்பிரமணியம் குருபரன்,
3). திரு.பொன்னம்பலம் பரந்தாமன்,
4). திரு.வேலாயுதம் ஆனைமுகன்

ஆகியோர் அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களாவர்.

அவ்வாறு தெரிவு செய்யப்பட்டவர்கள் புதிய யாப்பு திருத்த பிரேரணைகளை உள்வாங்கி, புதிய பிரேரணைகளை உள்ளடக்கிய யாப்பினை 26.10.2022 அன்று தற்போதைய நிர்வாக சபையினரிடம் கையளித்து நிர்வாக சபையின் ஏகமனதான அங்கீகாரத்துடன் 06.11.2022 அன்று காரைநகர் சைவமகா சபை மண்டபத்தில்

நடைபெற்ற விசேட பொதுச்சபை கூட்டத்தில் ஆயுட்கால உறுப்பினர்களின் 2/3 சதவீதத்தினை பெற்று திருத்தப்பட்ட யாப்பு அன்றிலிருந்து நடைமுறைக்கு வந்துள்ளது என காரைநகர் அபிவிருத்தி சபை நிர்வாகத்தினால் அனைத்து அங்கத்தவர்களிற்கும் வெளிநாடுகளில் உள்ள காரை அமைப்புகளிற்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

திருத்தப்பட்ட யாப்பின் முக்கிய அம்சங்களாக நிர்வாக சபைக்கு தெரிவாகும் அங்கத்தவர்களின் தகுதி, தராதரம், வதிவிடம் என்பன முக்கிய அம்சங்களாக கணிக்கப்பட்டுள்ளதுடன் பல்வேறு புதிய அம்சங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.
15 பக்கங்கள் உள்ளடங்கிய யாப்பு திருத்தத்தின் கவனிக்கப்பட வேண்டிய முக்கிய அம்சங்களாவன வருமாறு:


1. காரைநகர் அபிவிருத்தி சபை ஒவ்வொரு வருடமும் திருவெம்பாவை உற்சவம் நிறைவுற்றதும் ஓரிரு தினங்களில் 'காரை சங்கமம்' என்னும் விழாவினை நடாத்தும்.
2. அங்கத்தவர் ஆண்டு சாந்தா 1,000 ரூபா. ஆயுட்கால சாந்தா 10,000 ரூபா.
3. ஆண்டுச் சந்தா அங்கத்தவராக சேரவிரும்புபவர் தனது விண்ணப்பத்தில் சிபார்சு செய்பவராக இச்சபையின் ஆயுட்கால அங்கத்தவராக உள்ள ஒருவரைக் குறிப்பிட்டு அவரது கையொப்பத்துடன் விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்க வேண்டும்.
4. ஆண்டு சாந்தா ஒவ்வொரு வருடமும் ஜனவரி 31ம் திகதிக்குள் செலுத்தப்படவேண்டும்.
5. தொடர்ச்சியாக மூன்று ஆண்டுகள் ஆண்டு சந்தா கட்டும் அங்கத்தவர்களும் ஆயுட்கால அங்கத்தவர்களும் மட்டுமே பொதுச்சபையில் வாக்கு அளிக்கும் தகைமை உடையவர்கள். மற்றைய அங்கத்தவர்கள் பொதுக்கூட்டத்தில் பார்வையாளர்களாக மட்டுமே பங்களிக்க முடியும்.
6. பொது வெளியில், பொதுக்கூட்டத்தில் துர்நடத்தையான செயற்பாடுகளில் ஈடுபட்டால் ஆயுட்கால அங்கத்தவமோ அன்றி ஆண்டு அங்கத்துவமோ பொதுச்சபையினால் இழக்கச்செய்யப்படலாம்.
7. நிர்வாக அங்கத்தவராக ஆயுட்கால உறுப்பினர்களே தெரிவு செய்யப்படுவதற்கு உரிமையுடையவர்கள்.
8. தலைவர், செயலாளர், பொருளாளர் என்பவர்கள் களபூமி, வலந்தலை, தங்கோடை என்பவற்றை பிரதி-நிதித்துவப்படுத்தும் வகையில் சுழற்சி முறையில் தெரிவு செய்யப்பட வேண்டும். (களபூமி என்பது துறைமுகத்தில் இருந்து கிழக்கு நோக்கி வலந்தலை சந்தி வரை வீதியின் இருபக்கத்தினையும், வலந்தலை என்பது வலந்தலை சந்தியில் இருந்து ஆலடி சந்தி வரையுள்ள வீதியின் இருபக்கத்தினையும், தங்கோடை என்பது ஆலடி சந்தியில் இருந்து கடற்படை தளம் வரையுள்ள வீதியின் இருபக்கங்களையும் குறிக்கும்)
9. நடப்பாண்டின் தலைவர், செயலாளர், பொருளாளர் தொடர்ந்து வருகின்ற நிர்வாக சபையியில் மேற்குறிப்பிட்ட பதவிகளை வகிக்க இயலாது.
10. நிர்வாக சபையில் அரசியல் கட்சியினை பிரதிநிதித்துவப்படுத்தும் முக்கிய நபர்களும், தவிசாளர், அரச நிர்வாக பதவிநிலை அலுவலர்கள் போன்றோரும் நிர்வாக சபையில் இடம்பெறமுடியாது.
11. நிர்வாக சபையில் இருந்து முன்னர் நீக்கப்பட்டவர்களும் குற்றச்சாட்டுக்குள்ளான நபர்களும் மீண்டும் நிர்வாகத்தில் பங்கேற்க முடியாது.
12. தலைவர், செயலாளர், பொருளாளர் உட்பட நிர்வாக சபையில் 15 நிர்வாக உறுப்பினர்கள் பொதுக்கூட்டத்தின் போது தெரிவு செய்யப்படுவார்கள். இவர்கள் தவிர மாணவர் நூலகமான 'அறிவாலயம்' செயற்பாடுகளிற்காக மேலும் மூவர் ஆயுட்கால அங்கத்தவர்களில் இருந்து தெரிவு செய்யப்படுவார்கள்.
13. அறிவாலயம் வாசிகசாலை நடவடிக்கைக்கும் நூலக நடவடிக்கைக்கும் கற்றல் நடவடிக்கைக்கும் எவராலும் பயன்படுத்தப்படலாம். கலைநிகழ்வுகள், பொதுக்கூட்டங்கள் போன்ற கற்றல் தவிர்ந்த நடவடிக்கைகள் இக்கட்டிடத்தில் முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது.
14. பொதுக்கூட்டம், விசேட கூட்டம் என்பவற்றிற்கு ஆயுட்கால அங்கத்தவர்கள் மற்றும் தொடர்ச்சியாக 3 வருடங்கள் அங்கத்தவராக இருந்தவர்கள் உட்பட 51% பங்குபற்றியிருக்க வேண்டும்.
15. தொடர்ந்து மூன்று இதுபோன்ற கூட்டங்கள் கோரம் இன்றி நடைபெற நேர்ந்தால் சமூகமளிக்காத ஆயுட்கால அங்கத்தவர்கள் உட்பட அங்கத்தவர்களை நீக்கிய பின்னர் நான்காவது கூட்டம் கூட்டப்படும்.
16. 'அறிவாலயம்' எனப்படும் மாணவர் நூலகமானது என்றும் காரைநகர் அபிவிருத்தி சபையின் இணை நிறுவனமாகும். இது சுயாதீனமாக செயற்படுவதற்கு எந்த சட்டவலுவுமில்லை.
17. 'அறிவாலயம்' செயற்படுவதற்கு ஒருவருடத்திற்குரிய செலவீனங்களை மேற்கொள்வதற்குரிய நிதியினை நிர்வாகம் வங்கியில் நிரந்தரமாக பேணுதல் வேண்டும்.
18. காரைநகர் அபிவிருத்தி சபை எந்த காலத்திலும் அரசுடன் அல்லது அரச திணைக்களத்துடன் இணைக்கப்படகூடாது.
இதற்குரிய இறைமை இச்சபையை உருவாக்கியவர்களையே சார்வதால் பொதுச்சபையோ அன்றி மேலும் ஒரு யாப்பு திருத்தத்தின் மூலமோ இதனை எக்காலத்திலும் மாற்றுதல் முடியாது.

06.11.2022 முதல் நடைமுறைக்கு வரும் காரைநகர் அபிவிருத்தி சபையின் புதிய யாப்பின் புதிய நிர்வாக சபை அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள் எனவும் 2023 ஜனவரியில் அதற்கென பொதுக்கூட்டம் கூட்டப்படலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

# சிறப்புமிகு சேவையாளன் திரு. உடையார் இராமலிங்கம் நாகலிங்கம்

(கருங்காலி, காரைநகர்)

பிறப்பு: 22.12.1893 - இறப்பு: 22.07.1965



முன்னாள் செயலாளர், தலைவர் சைவமகாசபை, காரைநகர்
முன்னாள் நிர்வாகி, கருங்காலி போசுட்டிமுருகன் ஆலயம்
முன்னாள் முகாமையாளர் வியாவில் சைவ பரிபாலன வித்தியாசாலை

கற்க கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

மேற்கூறிய வள்ளுவர் குறளுக்கு ஏற்றாற்போல் அதற்கு இலக்கணமாக வாழந்தவர் தான் இக்கட்டுரையின் கதாநாயகனாக விளங்கும் இராமலிங்கம் நாகலிங்கம் அவர்கள். தன்னைப் போலவே மற்றவர்களும் முன்னேற வேண்டும் எனும் நோக்கில் ஏழைக் குழந்தைகளின் கல்விக்கு உயிர் கொடுத்த பெருமகன்.

இந்துமாகடலின் முத்தென விளங்கும் இலங்கைத்தீவின் சிரசாகிய யாழ்ப்பாணத்தின் கண்ணாக விளங்குவது காரைநகராகும். அந்நகரின் மேற்குத் திசையில் அமைந்துள்ள கருங்காலி எனும் சிறு குறிச்சியில் வாழ்ந்த உடையார் இராமலிங்கத்தின் இளைய புதல்வனாக 22.12.1893ல் வந்துதித்தவர் தான் திரு நாகலிங்கம். இவர் உடையார் நாகலிங்கம் எனவும் அழைக்கப்பட்டார். இவருக்கு மூத்த சகோதரர் வேலுப்பிள்ளையாவர்.

திரு நாகலிங்கம் அவர்கள் தனது ஆரம்பக் கல்வியை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியிலும், (Vaddukkoddai Jaffna Collage) உயர் கல்வியைச் சென்னை உயர்கல்லூரியிலும் பயின்று தேறினார். இந்தியாவில் கல்வி பயின்ற காலத்தில் அண்ணல் காந்தி, ஜவகர்லால் நேரு போன்றோரின் போதனையில் இவருக்கு ஈர்ப்பு ஏற்பட்டது.

படிப்பை முடித்துவிட்டு மீண்டும் காரைநகருக்குத் திரும்பிய திரு நாகலிங்கம் அவர்கள் சமூகத்திற்கு ஏதாவது செய்ய வேண்டுமென எண்ணியவர் களத்தில் இறங்க ஆரம்பித்தார் அதன் ஒரு அங்கமாக மு.திசைநாயகம், க.கதிரவேலு, இ.நாகலிங்கம், ஆ.முருகேசு, இ.கந்தையா,ஆ.கதிர்வேல், வே.தம்பிஜயா, அ.சின்னத்தம்பி, க.நவரத்தினம், கா.சி.மஹேசசர்மா ஆகியோர் ஒன்றினைந்து 15.03.1915ல் ஆயிலி சிவஞானோதய வித்தியாசாலையில் கருத்துக்களைப் பரிமாறியதன் பலனாக "காரை இளைஞர் தேர்ச்சிச் சங்கம்" என்ற பெயரில் சங்கம் ஒன்றை திரு திசை நாயகம் தலைமையில் உருவாக்கினார். இதன் மூலம் கிராம மாணவர்களை கல்வியில் முன்றேற்றும் வகையில் செயற்படத்தொடங்கினர்.

**காரைநகர் சைவமகா சபையின் தோற்றமும் உடையார் நாகலிங்கம் அவர்களின் வாழ்க்கை வரலாறும்!**

இவ்வாறு நடைபெற்றவேளையில் மூன்று வருங்களின் பின்னர் சங்கத்தின் பெயரை 21.12.1918ல் "காரை இந்து வாலிபர் சங்கம்" எனப்பெயர் மாற்றியதோடு பொ.வேலுப்பிள்ளை அவர்களைத் தலைவராகவும், திரு. இ. நாகலிங்கம் அவர்களைச் செயலாளராகவும் தெரிவு செய்தனர். பிற்காலத்தில் இ.நாகலிங்கம் அவர்கள் சைவமகாசபையின் தலைவராகவும் செயற்பட்டார்.

இந்து வாலிபர் சங்கத்திற்கென ஓர் கட்டடம் அமைக்கவேண்டுமென எண்ணிய வேளையில் அப்பொழுது செயலாளராவிருந்த திரு. இ.நாகலிங்கம் அவர்கள் பெரு முயற்சியினால் பூதனடைப்பு எனும் பெயர் கொண்ட காணி திருமதி வே.வள்ளியம்மை என்பவரிடம் இருந்து சங்கத்திற்கென நன்கொடையாகப் பெறப்பட்டது. அதில் சிறிய கட்டடமும் அமைக்கப்பட்டது. மீண்டும் ஸ்ரீமத் சுவாமி விபுலானந்தா அவர்களின் அறிவுரையின் பலனாக இந்து வாலிபர்சங்கம் என்ற பெயரை மாற்றி "சைவ மகாசபை" எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டதோடு 12.12.1924ல் சபைக்கெனப் பெரிய மண்டபம் ஒன்றும் கட்டிமுடிக்கப்பட்டது. திரு நாகலிங்கம் அவர்கள் காரை இந்து வாலிபர் சங்கம் ஆரம்பித்த நாளிலிருந்து இறக்கும்வரை இச்சபையின் அங்கத்தவராக இருந்துள்ளார் என அறியப்படுகின்றது.

இவரின் இன்னொரு முயற்சியினால் வியாவில் கடற்கரையில் மடாலயம் ஒன்று அமைக்கும் பணி சைவ மகா சபையினால் முன்னெடுக்கப்பட்டு கருங்காலி, பலகாடு மக்களின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டது. இதற்கான காணி அ.இராமநாதன் என்பவரால் 06.05.1923ல் நொத்தரிசு திரு அ.கனகசபை முன்னிலை 237ம் இலக்க உறுதியின் மூலம் சபைக்குத் தர்மசாதனம் செய்யப்பட்டது.

இவைமட்டுமன்றி தான் இறக்கும் வரை சைவமகாசபையின் நடவடிக்கைகள் தங்கு தடையின்றி நடைபெற வேண்டுமென்பதில் அதீத அக்கறை கொண்டிருந்தார். இவருக்குப் பக்கபலமாகப் பலர் இருந்துள்ளனர். இவர்களுள் ஒரு-

வர் தங்கோடையைச் சேர்ந்த திரு.ச.வைத்தியலிங்கம் என்பவராகும். இருவரும் உற்ற நண்பர்களாவர்.

திருநாகலிங்கமும் நிர்வாகத்தினரும் எடுத்த பெருமுயற்சியினால்




ஸ்ரீமத் சுவாமி விபுலானந்தா
ஸ்ரீமத் சுவாமி சர்வானந்தா
மகாத்மா காந்தியடிகள்
ஸ்ரீ இராஜ கோபாலாச்சாரியார்
பண்டிதர் ஜவகர்லால் நேரு
ஸ்ரீமதி கமலாநேரு
சுவாமி சச்சிதானந்த ராஜயோகிகள் (சங்கரசுப்பையர்)
டாக்டர் ரா.பி சேதுப்பிள்ளை
ஸ்ரீமதி இந்திராகாந்தி
திரு.அ.ச. ஞானசம்பந்தன்
சைவப்பெரியார். சு. சிவபாதசுந்தரம்பிள்ளை
கௌரவ வீ.வீ.கிரி
வித்துவான் கி.வா ஜகந்நாதன்
பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை
பண்டிதமணி சு.நவநீதகிருஷண பாரதியார்
உள்ளிட்ட முப்பத்தைந்துக்கும் மேற்பட்ட சமய, சமூகப் பெரியார்கள் சைவ மகாசபைக்கு வந்து சொற்பொழிவாற்றியது காரைநகர் பெற்ற தவப்பயன் என்றே கூறவேண்டும்.

திரு. நாகலிங்கம் அவர்களின் திருமணத்தின் பேறாக மூன்று ஆண் குழந்தைகள் பிறந்தனர். அவர்கள் முறையே திருநாவுக்கரசு, தியாகராசா, அருள்நந்திசிவம் ஆகியோராவர். பள்ளிப்பருவடைந்த அவர்களுக்குச் சிறந்த கல்வியூட்டி, சிறந்த உத்தியோககளையும் அமைத்துக்கொடுத்தார். மூத்த மகன் திருநாவுக்கரசு அவர்களுக்குக் காரைநகர் மேற்கு விதானையாராகப் பதவி கிடைத்தது. சிறிது காலத்தில் விதானையார் முறை அரசாங்கத்தினால் ஒழிக்கப்பட்டு கிராம சேவகர் பதவி நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. கிராம சேவகர் பரீட்சையில் சித்தியெய்திய திருநாவுக்கரசு அவர்கள் கிராம சேவராகப் பதவியைத் தொடர்ந்தார். இரண்டாவது மகன் தியாகராசா அவர்கள் வியாவில் சைவ பரிபாலன வித்தியாசாலையில் ஆசிரியராக் கடமையாற்றினார். அவ்வேளை அவருக்கு திடீரென ஏற்பட்ட சுகவீனம் காரணமாகக் காலமானார். மூன்றாவது மகனான அருள்நந்திசிவம் அவர்கள் புகையிரதத் திணைக்களத்தில் புகையிரத நிலைய அதிபராக நீண்டகாலம் சேவையாற்றி இறைப்பாறியுள்ளார். தனது மூத்த மகன் திருநாவுக்கரசு அவர்களுக்கும், இளையமகன் அருள்நந்திசிவம் அவர்களுக்கும் நற்குணங்கள் நிறைந்த மணப்பெண்களைத் தேர்ந்தெடுத்து திருமணங்களை செய்துவைத்ததன் மூலம் தந்தைக்குரிய கடமைகளை நிறைவு செய்தார் என்றே கருதவேண்டும்.

தனது மூத்த சகோதரரான வேலுப்பிள்ளைக்குப் பின் திரு.நாகலிங்கம் அவர்கள் 1948ம் ஆண்டு கருங்காலி போசுட்டி முருகன் ஆலய நிர்வாகத்தைப் பொறுப்பேற்றார். அன்றிலிருந்து அவருடைய மரணம் சம்பவிக்கும்வரை ஆலய நிர்வாகத்தைத் திறம்பட நடாத்தி முடித்தார் என்றே கூறவேண்டும். ஆலய அறங்காவலர் என்ற வகையில் ஆலயத்தில் நேரந்தவறாத பூஜை, வழிபாடு, அவை சைவ ஆகமமுறைப்படி நடைபெற வேண்டுமென எண்ணி அவ்வாறே நடைபெற ஆவன செய்தார். ஆலயத்தில் மதத்தின் பெயரால் களியாட்டங்கள் நடைபெறுவதை அவர் விரும்பவில்லை. அத்துடன் ஆலயத்தில் இசைக்கப்படும் பாடல்களோ அல்லது நாதஸ்வர இசையோ பக்தி கீதங்களை மட்டுமே தாங்கியதாக இருக்க வேண்டுமெனவும் விரும்பியதுடன் அடியார்கள் ஆலயத்திற்கு வரும்பொழுது ஆசார சீலர்களாக வரவேண்டுமென்பதில் அதிக கவனம் செலுத்தினார்.

ஆலயத்தில் கந்த ஷஷ்டி காலங்களில் கந்தபுராணம் படித்து பொருள் விளக்கம் கூறுவது வழமை. திரு நாச்சி பொன்னம்பலம் அவர்கள் அவர் இறக்கும்வரை பொருள் கூறிவந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இதனை திருநாகலிங்கம் அவர்கள் நடைமுறைப்படுத்தினர்.

இதே வேளை வியாவில் சைவபரிபாலன வித்தியாசாலையின் முகாமையாளராகவும் கடமையாற்றினார். இப்பாடசாலை 1889ம் ஆண்டளவில் சைவ ஆசிரியர்களைத் தோற்றுவித்த மகான் சங்கரப்பிள்ளை அருணாசலம் அவர்களால் தோற்றுவிக்கப்பட்டதாகவும் இதற்கான நிலத்தை கா.வேதக்குட்டி ஐயரவர்கள் வழங்கியதாகவும் அறியப்படுகின்றது.

திருநாகலிங்கம் அவர்கள் முகாமையாளராகப் பதவியேற்ற திகதி சரியாகத் தெரியவில்லை. இருந்தும் நான் பாலர் வகுப்பில் சேரந்த 1947ம் ஆண்டு இவரே முகாமையாளராக இருந்தார் என்பது மட்டும் எனக்குத் தெரியும். இவர் நிர்வாகத்தில் சற்று இறுக்கமான நிலையைக் கடைப்பிடித்தார் என்றே கூறவேண்டும். ஆசிரியர்களும் மாணவர்களும் நேரந்தவறாது பாடசாலைக்கு வரவேண்டும் என அறிவுரை வழங்கிய அவர் நேரந்தவறி வந்தவர்களுக்கான தண்டனையையும் தானே நேரில் வழங்கினார்.

இவர்காலத்தில் பாடசாலையின் தலைமை ஆசிரியராக இடைக்காடு பண்டிதர் சு.இராமசாமி அவர்கள் கடமையாற்றினார். அத்துடன் ஒவ்வொரு பாடங்களிலும் பாண்டித்தியம் பெற்ற ஆசிரியர்களையும் நியமித்திருந்தார்.

நாச்சி பொன்னம்பலம் ஆசிரியர் அவர்களைப் பாலர் வகுப்பிற்கு நியமித்திருந்தார். இவரிடம் படிக்கும் சந்தர்ப்பம் எனக்கும் கிட்டியது. அப்பொழுது பாலர் வகுப்பு மாணவர் நிலத்தில் இருந்தே கற்றனர். அவர்கள் முன் மணல் பரவப்படடிருக்கும். மாணவர்கள் வலது கைச்சுட்டுவிரலால் உயிரெழுத்துக்கள் முதல் உயிர்மெய் எழுத்துக்கள் வரை எழுதவேண்டும். நாச்சி பொன்னம்பலம் அவர்கள் எமது விரலைப் பிடித்து மண்ணில் ஊன்றி எழுதுவார். எமக்கு விரல் வலிக்கும். பலர் அழுவதுமுண்டு.

ஆ.விநாயகசிவம் பிள்ளை (தமிழ்), மு.நல்லதம்பி (தமிழ், கணிதம்), அ.தேவராசா (தமிழ்,பொது அறிவு, பொது விவேகம்), ந.தெய்வானைப்பிள்ளை (தையல்) கொட்டைக்காடு சு.பாக்கியம் (ஆங்கிலம்), காங்கேசன்துறை மு. மாணிக்கம் (ஆங்கிலம்), இணுவில் நடராசா ஆசிரியர் (நெசவு) கோப்பாய் சின்னம்மா ஆசிரியை (பன்னவேலை) போன்ற பல திறமைமிக்க ஆசிரியர்களை நியமித்து மாணவர் கல்வியை ஊக்குவித்தார்.

மேற்படி ஆசிரியர்கள் துணையுடனும், திரு நாகலிங்கம் அவர்களின் ஊக்குவிப்பினாலும் கருங்காலியைச் சேர்ந்த மூன்று மாணவர்களும், பலகாட்டைச் சேர்ந்த இரண்டு மாணவர்களும் ஐந்தாம் வகுப்பு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்தி அரசாங்க செலவில் வேலணை அரசினர் மத்தியகல்லூரியில் அக்கல்லூரி விடுதிகளில் தங்கியிருந்து கல்வி கற்கும் வாய்ப்பைப்பெற்றனர். இதன் மூலம் வியாவில் சைவபரிபாலன வித்தியாலயம் காரைநகர் பாடசாலைகளிலேயே இரண்டாம் இடத்தை பெற்றிருந்தது. முதலாம் இடத்தை தலைமை ஆசிரியர் கார்த்திகேசு உபாத்தியாயர் அவர்களால் நிர்வகிக்கப்பட்ட களபூமி சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாசாலை பெற்றுக்கொண்டது. இப்பாடசாலையில் இருந்து இவருடைய சேவைக்காலத்தில் எட்டுமாணவர்கள் புலமைபரிசில் பரீட்சையில் சித்தியெய்தினர்.

**மாணவர் ஒருவர் பாடசாலைக்கு வரவில்லையென்றால் திரு நாகலிங்கம் அவர்கள் அந்த வீட்டுக்கு மாணவர் ஒருவரை அனுப்பி அவரை அழைத்துவரச் செய்தார். சிலவேளைகளில் தானே மாணவன் வீட்டுக்குச் சென்று பெற்றோருக்கு அறிவுரை கூறி அம்மாணவனை அழைத்து வந்தார்.**

மாணவர் ஒருவர் பாடசாலைக்கு வரவில்லையென்றால் திரு நாகலிங்கம் அவர்கள் அந்த வீட்டுக்கு மாணவர் ஒருவரை அனுப்பி அவரை அழைத்துவரச் செய்தார். சிலவேளைகளில் தானே மாணவன் வீட்டுக்குச் சென்று பெற்றோருக்கு அறிவுரை கூறி அம்மாணவனை அழைத்துவந்தார். இதற்கும் மேலாப் பகல் 1.00 மணிக்கு பாடசாலை வகுப்புக்கள் முடிவுற்றாலும், ஆசிரியர்கள் துணை கொண்டு மாலையிலும் பிரத்தயேக வகுப்புக்களை நடாத்தினார்.

வெள்ளிக்கிழமைகளில் காலையில் மாணவர்கள் எல்லோரும் கட்டாயமாக ஆலயம் சென்று வழிபாடுகளில் ஈடுபடவேண்டுமென உத்தரவிட்டிருந்தார். அப்படி ஆலயம் செல்லாது இருப்பவர்களை உரிய காரணம் கேட்டுவிசாரிபார். தகுந்த காரணம் கூறாதவிடத்து தண்டனையும் வழங்கினார். வசதி குறைந்த மாணவர்களுக்கு புத்தகம், கொப்பி, பேனா, பென்சில் என்பவனவற்றை இலவசமாக வழங்கி அவர்களின் கல்வி வளர்ச்சிக்கு ஊக்கம் அளித்தார்.

பாடசாலை மாணவர்கள் பசியுடன் இருக்கக் கூடாதென்பதற்காக மதிய உணவாக பாண், பருப்புகறி, கடலை, அவல், தோசை, பயறு என்பவனவற்றைத் தவறாது வழங்க ஆவனசெய்தார். இவற்றைத் தயார் செய்து வழங்குவதற்காக ஆரம்பகாலத்தில் திருமதி சிதம்பரப்பிள்ளை அவர்களையும், அவரது மறைவுக்கு பின் பாறாத்தை என எல்லோராலும் அழைக்கப்படும் பார்வதி அவர்களையும் நியமித்து ஆவனசெய்தார்.

பாடசாலையில் நாயன்மார்கள் குருபூஜைகள், நவராத்திரி என்பவற்றைக் கொண்டாட ஆவன செய்தார். நவராத்திரி காலங்களில் மாலைவேளைகளில் மாணவர்களை வீடுவீடாக அழைத்துச்சென்று

> “கன்னித்திங்கள் வருகிறதம்மா
> கருத்துடன் நவராத்திரி பூஜை”

எனும் பாடலை மாணவர்கள் மூலமாகப் பாடவைத்து கோலாட்டம் அடித்து மக்கள் மத்தியில் சமய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தினர். அவர்களும் பதிலுக்கு மாணவர்களுக்கு கடலை, அவல், கற்கண்டு என்பவற்றை வழங்கி மகிழ்வுற்றனர். இதன் மூலம் மாணவர், ஆசிரியர், பெற்றோர் அன்னியோன்யம் சிறப்புற்று விளங்கியது.

ஆசிரியர் ஒருவர் வரவில்லையென்று தெரிந்து கொண்டால் தானே அவ்வகுப்பிற்கு நேரில் சென்று அவரது பாடங்களைக் கற்பித்தார். இவர் ஒரு கந்தியவாதியும் கூட. எந்த ஒரு கூட்டத்திற்கு செல்வதாக இருந்தாலும் கதர்வேட்டி கதர்சட்டை கதர் சால்வை, தொப்பி என்பனவற்றை அணிந்து செல்வதை இவர் வழக்கமாகக் கொண்டிருந்தார். சுருக்கமாகக் கூறினால் இவர் சைவத்திற்கும், தமிழுக்கும், அரும்பணி ஆற்றிய பெரியார் என்றால் மிகையாகாது.

வித்துவான் F.X.C நடராசா அவர்கள் உடையார் நாகலிங்கம் அவர்கள் பற்றித் தாம் எழுதிய காரைநகர் மான்மியம் என்னும் நூலில் பின்வருமாறு கூறுகின்றார். அந்தக்காலத்து முகாமையாளர்களுக்குள் இவர் தனித்தன்மை வாய்ந்தவர். பாடசாலைக்கு நாள் தவறாது செல்லும் பான்மையுடையவர். காலையிலும் போவார் மாலையிலும் போவார். மாலையில்

போகும் போது மல்லித்தண்ணீர் கொண்டு செல்வார். பாடசாலையை நாள் தோறும் தொடக்கி வைப்பவரும் இவர். முடித்துவைப்பவரும் இவரே. அடியேனும் அங்கு ஆசிரியாராகப் பணிபுரிந்தவன். இந்த முகாமையாளர் எனக்கு வாய்க்காது போயிருந்தால் நான் ஆசிரியராகப் பயிற்சி பெற்றிருக்கமாட்டேன். என்னை நிலைபேறான ஆசிரியராக ஆக்கியபெருமை இவருக்கே உரியது.

அத்துடன் என்னைப் போல வேறு சிலரையும் ஊக்குவித்து உயர்த்தியுள்ளார். அத்துடன் நின்றுவிடாது சைவ மகா-சபையிலும், பாடசாலையிலும் நெசவு நிலையங்களை உண்டாக்கி காரைநகரில் முதன் முதலாக நெசவுத் தொழிலைப் பரப்ப உதவியவரும் இவரே என்பதுடன், பேச இனியர், கள்ளங்கபடமற்றவர். பொதுத்தொண்டே இவரது ஆசையும், பாசமும் எனக் கூறி முடிக்கின்றார். இவர் எப்பொழுதும் இந்து சாதனம் பத்திரிகையை விரும்பி வாசிப்பார். அதனால் சனிக்கிழமைகளில் எம்போன்ற மாணவர்கள் அப்பத்திரிகையை வாசிக்க அவர் கேட்டுகொண்டிருப்பார்.

இவரது சேவையால் நன்மை பெற்றவர்களில் யானும் ஒருவன் என நினைக்கும் போது என் மனம் புளகாங்கிதம் அடைகின்றது. இப்படிப்பட்ட பெருமகன் 22.07.1965ல் இறைவணடிசேரந்தார்.

நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார் சொற்கேட்பதுவும் நன்றே — நல்லார்
குணங்கள் உரைப்பதும் நன்றே யவரோ
டிணங்கி யிருப்பதுவும் நன்று.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய அடைய அவரின் உறவுகளுடன் நாமும் சேர்ந்து எல்லாம் வல்ல கருங்காலி போசுட்டி முருகனை வேண்டிப் பிரார்த்திப்போமாக. சாந்தி ! சாந்தி ! சாந்தி !



**தொகுப்பு:**
திரு.தம்பையா நடராசா
கருங்காலி
காரைநகர்
(கனடா)

இக்கட்டுரைக்கு ஆதாரமாக அமைந்தவை
- காரைநகர் சைவ மகாசபை பொன்விழா மலர் 1967
- காரைநகர் மான்மியம்
- காரை ஆதித்தியன் சுவிஸ்
- நேரில் பெற்ற அனுபவங்கள்

## ஒளிச்சுடர் விளையாட்டு கழகத்திற்கு ‘எனது ஊர் காரைநகர்’ ஊடான நிதியுதவி

காரைநகர் விளையாட்டு கழகங்களில் அதிகளவு விளையாட்டு வீரர்களை உள்ளடக்கியதும் ஆர்வத்துடன் விளையாட்டு பயற்சிகளிலும் சிரமதான பணிகளிலும் ஈடுபட்டு வரும் ஒளிச்சுடர் விளையாட்டு கழகம் ஆர்வத்துடன் முன்னேற்றம் கண்டு வருகின்றது. ‘எனது ஊர் காரைநகர்’ ஊடாக இவ்வாண்டு விளையாட்டு கழக வீரர்களிற்கான காலணிகள் பெற்றுக்கொடுக்கப்பட்டதுடன், இவ்விளையாட்டு கழக மைதானத்தில் அமையப்பெற்றுள்ள மலசல கூட வசதிகளை நிறைவேற்றி நிதி உதவி செய்யப்பட்டதுடன் மேலும் மைதான நுழைவாயில் மேம்பாட்டுக்காக கோரப்பட்ட இரண்டரை இலட்சம் ரூபாய்கள் வழங்கப்படவுள்ளன.



இதற்கான நிதியுதவியாக அமெரிக்காவில் வதியும் திரு.சிவா தர்மலிங்கம் அவர்கள் ஒரு இலட்சம் ரூபாய்களும், தீசன் திரவியநாதன் ஒரு இலட்சம் ரூபாய்களும், ஜேர்மனியில் வதியும் திரு.அருள்முகன் சாயிபாபா விஜயரத்தினம் 50,000 ரூபாய்களும் வழங்க முன்வந்துள்ளனர்.

# காரைநகர் இந்துக் கல்லூரியில் இருந்து க.பொ.த.உயர்தர பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று பல்கலைக்கழகம் செல்ல தகுதியான மாணவர்கள்

28.08.2022 அன்று வெளியான பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் 2021ம் ஆண்டுக்கான க.பொ.த.உயர்தர பரீட்சையில் காரை இந்து கல்லூரியில் இருந்து தோற்றியிருந்த மாணவர்களில் 13 மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்வதற்குரிய தகுதியான பெறுபேறுகளை பெற்றிருக்கின்றார்கள்.

| இல | மாணவர் பெயர் | துறை | பெறுபேறு |
|---|---|---|---|
| 1 | செல்வன் திருச்செல்வம் லுகிர்தன் | வணிகதுறை | 3A |
| 2 | செல்வன் சிறிமகேஸ்வரலிங்கம் சிவச்செல்வன் | தொழில்நுட்ப பிரிவு | 2A, B |
| 3 | செல்வி தேவராசா ஜென்சிகா | தொழில்நுட்ப பிரிவு | A, 2B |
| 4 | செல்வன் சிவசுப்பிரமணியம் அறிவரசன் | தொழில்நுட்ப பிரிவு | 2B, C |
| 5 | செல்வி சி. வனிதா | தொழில்நுட்ப பிரிவு | 2B, C |
| 6 | செல்வி மகேஸ்வரன் கஜானி | கலைப்பிரிவு | A, 2B |
| 7 | செல்வி ஆனந்தராசா அமிர்தா | கலைப்பிரிவு | A, B, C |
| 8 | செல்வி கனகரத்தினம் பூர்விகா | கலைப்பிரிவு | A, B, C |
| 9 | செல்வி தேவபாஸ்கரன் சோபிகா | கலைப்பிரிவு | A, B, C |
| 10 | செல்வி சுந்தரலிங்கம் லக்ஷிகா | கலைப்பிரிவு | A, 2C |
| 11 | செல்வி யோகரத்தினம் அஸ்மிலா | கலைப்பிரிவு | A, 2C |
| 12 | செல்வி பேரின்பராசா தமிழினி | கலைப்பிரிவு | 2B, C |
| 13 | செல்வி பத்மராசா மகிழ் | கலைப்பிரிவு | A, 2C |



திருச்செல்வம்
லுகிர்தன்



சிறிமகேஸ்வரலிங்கம்
சிவச்செல்வன்



ஜென்சிகா
தேவராசா



சிவசுப்பிரமணியம்
அறிவரசன்



வனிதா
சிவானந்தன்



கஜானி
மகேஸ்வரன்



அமிர்தா
ஆனந்தராசா



பூர்விகா
கனகரத்தினம்



சோபிகா
தேவபாஸ்கரன்



லக்ஷிகா
சுந்தரலிங்கம்



அஸ்மிலா
யோகரத்தினம்



தமிழினி
பேரின்பராசா



மகிழ்
பத்மராசா

# காரைநகர் பிரதேச வைத்தியசாலை 2022



### Currently actively participating in the hospital development donors:

1). Patient Welfare Society
2). Mr.V.Nagenthiram
3). Mr. N.Inthiran (Director of Shakthi free education development center)
4). Mr.T.Thayaparan (Auto press printing)

**For further information you can contact:**

1. Dr.K.Senthooran(DMO), Devisional Hospital Karainagar 0772265387
2. Mr.N.Balakrishnan, President of Patient Welfare Society Devisional Hospital Karainagar 0740710123

### Currently available Services

- 24 hour EU/Ward (24 hour Doctors duty)
- Dental clinic - Monday to Saturday
- Eye Clinic - Every Saturday
- Psychiatric clinic - Every third week on Thursday
- Well women/ well baby clinic - 1st Wednesday and 3rd Wednesday
- Medical clinic - weekly
- Mobile psychiatric patients care
- Diabetic clinic - every Thursday 40 - 50 patients per week
- Hypertension, heart disease - every Monday 40 - 60 patients per week
- Bronchial asthma - every Tuesday 20 - 30 per week

### Building capacity and bed capacity

Number of beds in emergency ward - 2
Number of beds in male ward - 9
Number of beds in female ward - 10
Number of beds antenatal ward - 3

### Human resources

- Number of Doctors - 4
- Number of Dental Surgeon - 1
- Number of Nursing staff - 5
- Number of Midwife - 1
- Number of Dispenser - 1
- Number of Attendant - 6
- Ordinary Labour - 1
- Number of Helth assistance - 6
- Number of Ambulance driver - 1
- Number of Office staff - 1





## NUMBER OF PATIENTS ADMISSION 2022

| Month | Jan | Feb | Mar | Apr | May | Jun | Jul | Aug | Sep | Oct |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Admission | 251 | 166 | 224 | 220 | 215 | 172 | 155 | 158 | 170 | 222 |
| Transfers | 64 | 44 | 59 | 58 | 73 | 69 | 38 | 59 | 54 | |
| Discharge | 187 | 122 | 165 | 162 | 142 | 103 | 117 | 99 | 116 | |

## NUMBER OF PATIENTS ADMISSION 2021

| Month | Jan | Feb | Mar | Apr | May | Jun | Jul | Aug | Sep | Oct |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Admission | 243 | 226 | 239 | 230 | 233 | 242 | 269 | 202 | 172 | 203 |
| Transfers | 59 | 51 | 54 | 57 | 35 | 19 | 03 | 00 | 01 | 45 |
| Discharge | 184 | 175 | 185 | 173 | 198 | 223 | 266 | 202 | 171 | 158 |







## NUMBER OF PATIENTS of OPD 2022

| Month | Jan | Feb | Mar | Apr | May | Jun | Jul | Aug | Sep | Oct |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1st Visit | 2137 | 1465 | 1837 | 2226 | 2312 | 1624 | 1733 | 1890 | 1944 | 2005 |
| 2nd Visit | 266 | 192 | 232 | 286 | 362 | 191 | 211 | 313 | 260 | 289 |
| Total | 2403 | 1657 | 2069 | 2512 | 2674 | 1815 | 1944 | 2203 | 2204 | 2294 |

## NUMBER OF PATIENTS of OPD 2022

| Month | Jan | Feb | Mar | Apr | May | Jun | Jul | Aug | Sep | Oct |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1st Visit | 1746 | 1813 | 1618 | 1509 | 1460 | 1300 | 1194 | 1348 | 851 | 1331 |
| 2nd Visit | 253 | 290 | 75 | 189 | 201 | 249 | 215 | 105 | 181 | 195 |
| Total | 1999 | 2103 | 1693 | 1698 | 1661 | 1549 | 1409 | 1453 | 1032 | 1526 |

## கனடா காரை கலாசார மன்றம் மூன்று ஆண்டுகளின் பின்னர் கனடாவில் நடாத்திய 'காரை வசந்தம்' கலை விழாவும் காட்சிகளும் 10.12.2022

10.12.2022 சனிக்கிழமை அன்று கனடாவில் 'காரை வசந்தம் 2022' அரங்கேறியது. கோவிட் பெருந்தொற்றின் பின்னர் மூன்று ஆண்டுகளின் பின்னர் நடைபெற்றுள்ளது. கனடா காரை கலாசார மன்றத்தின் திரு.சிவசம்பு சிவநாதன் தலைமையிலான நிர்வாக சபை 24.08.2022 அன்று அமையப்பெற்றது. மிகவும் குறுகிய காலத்தில் காரை வசந்தம் நிகழ்வுகளிற்கான ஆயத்தம் செய்யப்பட்டு பலரது எதிர்பார்ப்புகளிற்கு மத்தியில் அரங்கேறியது.



கனடாவில் பனிவிழும் குளிர்காலத்தில் மக்கள் ஆதரவு இருந்தாலும் காலநிலை கைகொடுக்காவிட்டால் எந்த நிகழ்வும் வெற்றி விழாவாக நடைபெறுவது கடினம். ஆனாலும் 'காரை வசந்தம் 2022' குளிரிலும் மண்டபம் நிறைந்த மக்களுடன் வெற்றிவிழாவாக நடைபெற்றுள்ளது.

விழாவிற்கு பிரதம விருந்தினராக காரை மண்ணின் கலைஞன், ஒலிபரப்பு துறை ஊடகவியலாளர், ' ஒருத்தி ' வெற்றி திரைப்பட இயக்குனர் திரு.P.S.சுதாகர் அவர்களும், காரைநகர் அபிவிருத்தி சபை தலைவரும், மருதடி வீரகத்தி விநாயகர் ஆலய பொறுப்புரிமைசபை தலைவருமான திரு.சிவசுப்பிரமணியம் இராமநாதன் அவர்களும் கலந்து சிறப்பித்திருந்தனர்.



நிகழ்வுகள் குறிப்பிட்டது போன்ற மாலை 5.30 மணிக்கு காரை மண் தந்த நாதஸ்வர கலைஞன் N.K.கணேசன் அவர்களது புத்திரன் பவப்பிரியன் அவர்களது குழுவினரின் தவில் நாதஸ்வர இசையுடன் அமர்க்களமாக தொடங்கியது. குறுகிய காலத்தினுள் பயிற்றுவிக்கப்பட்ட காரைநகர் சிறார்கள் தங்கள் கலைப்படைப்புக்களை செவ்வனே மேடையேற்றினார்கள்.



கனடாவில் காரைநகர் சிறார்கள் மட்டும் பங்குபற்றும் தமிழ் திறன் போட்டிகள் நடாத்தப்பட்டு, பேச்சு, பண்ணிசை, சொல்வதெழுதல், வாசிப்பு என வயதுக்கேற்ற ஐந்து பிரிவுகளாக நடாத்தப்பட்ட போட்டிகளில் முதல் இடம் பெற்ற அனைவருக்கும் தங்கப்பதக்கம் பரிசாக வழங்கப்பட்டன. கனடாவில் காரைநகர் சிறார்கள் தமிழ் மொழியில் பாண்டித்தியம் பெறுவதை ஊக்குவிக்கும் முகமாக வழங்கப்பட்ட தங்கப்பதக்கங்கள் வெற்றிபெற்ற சிறார்களையும் பெற்றோர்களையும் மென்மேலும் ஊக்கப்படுத்துவதாக அமைந்து கொண்டது.
















நிர்வாக சபை உறுப்பினர்களுடன் பிரதம விருந்தினர் திரு.P.S.சுதாகர்

*With the best wishes*
*from*

# Dr. V. Vijayaratnam, M.D.

**FRCP, M.R.C.P.(UK), D.C.H.(Lond), D.C.C.H.(Edin.)**
**Pediatrics, Gastroenterology and Nutrition**





## Two Locations to Serve You

**DOWNTOWN**
600, Sherbourne Street, Suite 711
Toronto, ON. M4X 1W4
**TEL: 416-929-0929**

**SCARBOROUGH**
3430, Finch Avenue East
Scarborough, ON. M1W 2R5
**TEL: 416-496-1990**

# CLEARREX

WINDOWS & DOORS
MANUFACTURING INC.

***At Clearrex, we serve to homeowners, renovators, builders and dealers.***

***We are located in Burk's Falls and are serving customers throughout Northern Ontario.***



**Contact:**
**Mahadevan Balasubramaniam**

**Cell: 416-716-7052**

***567, HIGH STREET, BURKS'S FALLS, ONTARIO, P0A 1C0, CANADA***

***TEL: 705 382 9090 FAX: 705 382 0990***

***Email: mo@clearrex.com*** ***http://clearrex.com***

# DOUBLE SEAL INSULATING GLASS LTD.

Manufacturing high performance
insulating glass units
for commercial and
residental use.



**Contact:**
**MO BALASUBRAMANIAM**

***3530 Nashua Drive, Mississauga, ON. L4V 1L2***

***TEL: 905-672-3232 FAX: 905-676-9449***

***Email: mo@doubleseal.ca*** ***www.doubleseal.ca***